# ஒரு ஏப்ரல் புத்திசாலி





இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# ஒரு ஏப்ரல் புத்திசாலி!

# Oru April Puthisaali!

Author :

இந்திரா செளந்தர்ராஜன்

Indira Soundarrajan

For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

[அத்தியாயம் 7](#)

[அத்தியாயம் 8](#)

[அத்தியாயம் 9](#)

[அத்தியாயம் 10](#)

[அத்தியாயம் 11](#)

[அத்தியாயம் 12](#)

# 1

‘ஆங்கில மாதமான ஏப்ரல் மாதத்திற்குள் தான் தமிழ் வருடத்தின் முதல் மாதமான சித்திரை மாதம் பிறக்கிறது. இந்த மாதத்தில்தான் பருவகால வரிசையில் வசந்தகாலமும் உருவாகி மரம் செடி கொடிகளில் எல்லாம் பச்சை பிடிக்கத் தொடங்குகிறது. காலங்களில் வசந்த காலத்திற்கு தனிச்சிறப்பு உண்டு. இந்த காலத்தில்தான் நமது உடல் ஆரோக்கியத்திற்கு அடித்தளம் போட்டுத்தரும் மாம்பழம் நிறைய கிடைக்கும். அது மட்டுமல்ல... முன் வெப்ப காலமாகவும் இல்ல வசந்தகாலம் திகழ்வதால் அனைவர் உடலிலும் வியர்வைச் சுரப்பிகள் அதிகம் செயலாற்றும். இதனால் உடம்பில் உப்புச் சத்துகளில் நிலவும் சீரற்ற தன்மை சீராகும். கருப்பஞ்சாறு, வேப்பம்பூ, வெல்லச்சாறு, எலுமிச்சை ரசம், இளநீர், அதிக குடிநீர், நீராகாரம், என்று இக்காலகட்டத்தில் தாகத்தின் நிமித்தம் நிறைய விதங்களில் திரவ உணவை எடுத்துக் கொள்வோம். பிரதானமாய் மாம்பழத்தின் இரும்புச்சத்து உடம்பில் பெருமளவு ஈர்த்துக் கொள்ளப்படும்.

மொத்தத்தில் நமது உடல் நிலையில் வெப்பத்தாலே ஒரு மாறுபட்ட செயலாக்கங்கள் இம்மாதத்தில்தான் தொடங்குகிறது. வானிலும் மாலைப் பொழுதில் மஞ்சள் வெயிலில் விதம் விதமான மேகச் சித்திரங்களைக் காணலாம். இடி இடித்து கோடை மழையும் பெய்யும். ஆலங்கட்டிகளும் பூமியில் சிதறும் விசித்திரங்கள் நிரம்பிய மாதம் இது! எனவே காரணப் பெயராகவே சித்திரை என்று நம் முன்னோர்கள் பெயரிட்டனர் என்போரும் உண்டு!’

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் ஜேஜே என்று கூட்டம்! அன்றைய தரிசனத்திற்காக கோயிலுக்குள் நுழைந்திருந்தான் தமிழ்! தமிழ்ச் செல்வன் என்றுதான் அவன் அப்பா பெயர்

வைத்திருந்தார். அது என்னவோ தெரியவில்லை இரண்டு சொற்கள் கொண்ட பெயர்களை உடையவர்களை பெரும்பாலும் யாரும் அந்த இரண்டு சொற்களோடு அழைப்பதேயில்லை. சுரேஷ்குமார் என்றால் சுரேஷ், ராமச்சந்திரன் என்றால் ராமு, கிருஷ்ணகுமார் என்றால் கிருஷ்ணா என்று பெயரை சுருக்கிக் கொள்வதே எல்லோர் நாக்குக்கும் வழக்கமாகி விட்டது. இதன் காரணமாய் தமிழ்ச் செல்வனும் தமிழ் என்று ஆகி விட்டான்

நாமும் தமிழ் என்றே இனி விளிப்போமே…!

தமிழ் ஒரு மீனாட்சி அம்மன் பக்தன். மீனாட்சி அம்மன் கோயிலுக்கு போகும் போதெல்லாம் அங்குள்ள பொற்றாமரைக் குளக்கரையில் அமர்ந்து கொண்டு கற்பனையில் மூழ்கி விடுவான். அந்த பொற்றாமரைக் குளத்துக்கென்று ஒரு பெரிய வரலாறு உண்டு. சிவபெருமான் நடமாடிய குளப்பகுதி அது. ஔவையும் வள்ளுவரும் பொற்றாமரைக் குள படிக்கற்களில் அமர்ந்து சகோதர வாஞ்சையோடு எவ்வளவோ உரையாடியிருக்கிறார்கள். நக்கீரரை உரு சாம்பல் மூட்டையாக அந்த சர்வேஸ்வரன் ஆக்கியதும் அந்த குளத்தங்கரையில்தான். பின்பு அவர் உயிர்த்து எழுந்து வந்ததும் அந்த குளத்தக்கரையில்தான்…!

உலகில் எவ்வளவோ குளங்கள் இருக்கலாம். ஆனால் பொற்றாமரைக்குளம் எல்லாவற்றிலும் விதிவிலக்கானது. சாதாரணமாக குளம் என்பது தன்னுள் மூழ்கி எழும் தவசிகளின் உடம்பில் நிலவும் அருட்கதிர்களை தன்வசம் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது.

‘பாவம் கரைய ஆற்றில் மூழ்கு, புண்ணியம் சேர்ந்திட குளத்தில் மூழ்கு’ என்பது நம் முன்னோர்கள் நமக்கு சொல்லிச் சென்றிருப்பது. ஆம்…! ஓடும் ஆறு நாம் அதில் மூழ்கும் போது நமது பாவத்தை கரைத்து இழுத்துச் செல்ல வல்லது. ஆற்றில் மட்டுமே ஒரு மனிதன் ஒரு முறை குளித்த நீரில் மறுமுறை குளிப்பதில்லை. ஆனால் குளம் அப்படி அல்ல. குளத்தில் அருள் அலைகள் நீர் வடிவில் மண்டிக் கிடக்கின்றன. அதில் மூழ்கிடும் போது உடம்பு அதை ஸ்வீகரித்துக் கொள்கிறது.

இதனால்தான் மாமங்கம் போன்ற நிகழ்வுகளில் குளத்து நீராடல் முக்கிய பங்கு வகிக்கிறது. லட்சக்கணக்கான உடம்புகளின் அருட் திவலைகள் உள்ள ஒரு தண்ணீரை அன்று ஒரு தினத்தில் அன்றைய சில நிமிட நேரங்களில்தான் நாம் பெற முடியும்.

பொற்றாமரைக் குளம் முன்னால் அமர்ந்திருக்கும் போது தமிழ் இப்படி

குளம் தொடர்பான பூர்வீக எண்ணங்களில் மூழ்கிப் போவான். இப்பொழுது கூட அப்படித்தான். மீனாட்சி தரிசனம் முடிந்து வந்து குளக்கரையில் அமர்ந்து அப்படியே பலவித நினைவுகளில் மூழ்கிப் போனான். தமிழ், பெயரில் மட்டும் தமிழைக் கொண்டிருப்பவனில்லை. தமிழ் ஒரு நல்ல எழுத்தாளன். அதிலும் இன்று அவன் பெயர் சொல்லும் ஓர் எழுத்தாளன். அவனுக்கென்று ஒரு முகவரி இன்று தமிழ்நாட்டில் இருக்கிறது. கூடவே அவன் ஓர் அலுவலகப் பணியாளன்!

அவனுக்கான ஆதார சக்திகள் இரண்டே பேர்தான். ஒன்றுக்கு பெயர் அன்னை மீனாட்சி. இன்னொன்றுக்கு பெயர் கயிலாசம்!

அன்னை மீனாட்சியை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்த கைலாசத்தைத்தான் சொல்லி அறிமுகப்படுத்த வேண்டும்.

கைலாசம் அவனது முதலாளி.

முதலாளி என்றால் பாமரத்தனமாக இருக்கிறதல்லவா? அழகாக 'சேர்மன்' என்று சொல்வதில்தான் தமிழிற்கும் பிரியம் அதிகம். அவரால் தான் அவன் எழுத்தாளனாகவே ஆக முடிந்தது. கம்பனுக்கு ஒரு சடையப்ப வள்ளல், இவனுக்கு அவர்!

கோயிலில் மீனாட்சியின் முன்னால் மறக்காமல் முதலாளிக்காகவும் பிரார்த்தனை செய்து கொள்வான். கைலாசம் ஒரு மல்டி மில்லியனர். திரும்பின பக்கம் எல்லாம் அவருக்கு தொழிற்சாலைகள். உலகம் முழுக்க எப்பொழுதும் சுற்றிச் சுற்றி வருபவர். பரம்பரை பணக்காரர். ஆனால் பணக்காரர்களிடம் ஒட்டிக் கொண்டிருக்கும் எந்தவிதசெருக்கும் இல்லாத ஓர் அதிசய ஆத்மா!

இந்த உலகில் எல்லா துறைகளிலும் விதி விலக்கான மனிதர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களில் ஒருவராக கைலாசத்தை சொல்லலாம். தமிழுக்கு ஒரு பெரிய 'ரோல் மாடல்' கூட! இதனாலோ என்னவோ தமிழ் தன் மகனுக்கு அவர் பெயரையே வைத்து விட்டான்.

ஒரு வேடிக்கை என்னவென்றால் மகனுக்கு அவர் பெயரைவைத்து விட்டு 'டேய் கைலாசம்' என்று பாச மிகுதியோடு கூப்பிட கூச்சப்பட்டுக் கொண்டு தன் மகனையே 'சேர்மன்' என்று தான் கூப்பிடுகிறான்.

தமிழ் மனைவி சாருலதா ஒரு நல்ல குடும்பப் பெண்! ஜாடிக்கேற்ற மூடி மாதிரி அவனுக்கு அமைந்து விட்டவள். அவளும் அவனோடு சேர்ந்து கொண்டு தங்கள் மகனை சேர்மன் என்றும் MD என்றும் கூப்பிடுவது

தொடக்கத்தில் ஒரு வேடிக்கையான விஷயமாக இருந்து – பின்னர் பழகிவிட்டது.

தமிழின் மகன் கைலாசம், இப்பொழுது எஞ்சஜினியரிங் கல்லூரியில் B.E. படிக்கிறான். அவன் சினேகிதர்கள்கூட ‘டேய் சேர்மன்’ என்று அவனைக் கூப்பிடும் போது கேட்கும் நமக்கு வேடிக்கையாக இருக்கும்.

தமிழிற்கு அதைப் பற்றி எல்லாம் கவலை இல்லை. அவன் வரையில் அவன் மகன், தன் முதலாளி கைலாசம் போல வெற்றிமேல் வெற்றி பெற வேண்டும். அவரைப் போலவே பல்லாயிரம் பேருக்கு படி அளக்க வேண்டும். அவரைப் போலவே தமிழ்ப் பற்று, பண்பாடு, கலாசார சிறப்பு என்று எல்லாவற்றையும் கொண்டிருக்க வேண்டும். இதுதான் அவன் விருப்பம்! அதற்காகத்தான் தினமும் மீனாட்சியிடமும் வேண்டிக் கொள்கிறான்.

இன்னும் சில வருடங்களில் தமிழின் மகன் தலையெடுத்து அவன் ஆசைகளைப் பூர்த்தி செய்யத் தயாராகி விடலாம்தான். ஆனால் அதுவரை அவனது மதிப்பிற்குரிய முதலாளியான கைலாசத்தோடு அவனால் தொடர்ந்து பயணிக்க முடியுமா என்பது அவனுக்குள்ளேயே இப்பொழுது ஒரு பெரிய கேள்விக் குறியாகி வருகிறது.

அவனுக்குள் இப்போது ஒரு பயம்!

கற்பனைகளில் சுலபமாக சஞ்சரிக்க முடிந்த அவனுக்குள் இப்பொழுது சில யதார்த்தங்களின் தாக்கங்கள்.

பொற்றாமரைக் குளக்கரையில் அமர்ந்திருக்கும் போதும் மனது அதை எல்லாம்தான் அசை போட்டபடியே இருக்கிறது.

அன்று காலை ஆபீஸில் நடந்த ஒரு சம்பவம் அவனை சங்கடத்தின் உயரத்திற்கே கொண்டு சென்று விட்டது.

தமிழ் அவனது சீட்டில் அமர்ந்திருந்த நிலையில் கம்ப்யூட்டரில் அவன் பார்வை பதிந்திருந்தது. அதில் அவனது ஸ்டாக் டேக்கிங் கணக்கு வழக்குகள்… தேவைக்கு ஏற்ப ரிப்போர்ட் தயார் செய்து பிரிண்ட் எடுக்க வேண்டும். அதற்கான முனைப்பில் இருக்கும் போதுதான் கதவைத் திறந்து கொண்டு அந்த ஏ.சி. அறைக்குள் நுழைந்திருந்தான் மோகன்குமார். தமிழின் சக பணியாளன். வந்தவன் சும்மா இருக்கவில்லை. தொழிற்சாலை வம்பு தும்புகளைத் தமிழிடம் அலசத் தொடங்கி விட்டான்.

“தமிழ்!”

“உம்.”

“கொஞ்சம் இப்படி பாரேன்.”

“நான் இப்ப பிசியா இருக்கேன். எதுவா இருந்தாலும் லஞ்ச் டைம்ல பேசிக்கலாம்.”

“அப்பவும் பேசிக்கலாம். இப்பவும் நான் பேச வேண்டியதை பேசிட்டு போயிடறேன்.”

“நான் நிம்மதியா வேலை பாக்கறது உனக்கு எப்பவும் பிடிக்காதே…”

“அது எப்படி…? நமக்குதான் நம்மள சுத்தி எல்லாரும் நம்மளப் போலவே இருக்கணுமே?”

“இந்த வெட்கங் கெட்ட விஷயத்தை வெளிப்படையா வேற ஒத்துக்கறையாடா…?”

“இது வெட்கம் கெட்ட விஷயம் இல்ல தமிழ். இதுதான் யதார்த்தம். எந்த ஒரு ஃபேக்டரிலையும் உன்னைப் போல இருக்கற கேஸ் ஒண்ணோ இரண்டோ தான். ஆனா என் மாதிரி ஆட்கள் தான் நூத்துக்கு தொண்ணூறு பேர்.”

“அது என்னவோ உண்மைதான். சரி… என்ன விஷயம்? சொல்லிட்டு வேகமா இடத்தை காலி பண்ணு.”

“சரிடா… ஐயா இப்ப ஒரு அதிரடி நியூஸ் சொல்லப் போறேன். நல்லா கேட்டுக்கோ…”

“நீ வாயைத் திறந்தாலே எல்லாமே அதிரடிகள். இதுல தனியா ஒரு அதிரடி நியூஸா?”

“அதெல்லாம் சாதா அதிரடி… ஆனா இது ஹண்ட்ரட் பர்சண்ட் அதிரடி.”

“சரிடா… சொல்லித் தொலை!”

“சொல்லிட்றேன். நம்ம கம்பெனிக்கு புதுசா ஒரு PRO வரப் போறாரு…”

“PRO வா… யூமின் Public officer?”

“P.R.O.ன்னா… உலகம் பூரா அப்படித்தான் அர்த்தம்னு நானும் நினைக்கறேன்.”

“சரி… இப்ப அதுக்கென்ன?”

“அதுக்கென்னவா? ஆள் வருவான்… வந்த பிறகு பார்த்துட்டு சொல்… இத்துடன் நிறுவனச் செய்திகள் நிறைவடைகின்றன. அதிரடிச் செய்திகளுடன் அடுத்த செய்தித் தொகுப்பு உணவு இடைவெளியின் போது… டொட்டோடொய்ன்ன்…”

-மோகன்குமார் விலகிக் கொண்டு விட்டான். அவன் பீடிகை போட்டது போலவே அந்த P.R.O.வும் இருந்ததுதான் கொடுமை.

ட்யூட்டியில் சார்ஜ் எடுத்துக்கொண்ட அவரை தேடிச் சென்று ஒரு வாழ்த்து கூறுவதற்காக அவரது அறைக்கே போன அங்கே அவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

லேசாக திறந்திருந்த கதவுக்கு அப்பால் அந்த மனிதர் அந்த அறைக்குள்ளேயே சிறிய மது பாட்டிலை எடுத்து மூடியைத் திறந்து ஏதோ டானிக் குடிப்பது போல குடித்துக் கொண்டிருந்தார்!

பகீரென்றது!

கோயிலைப் போன்ற கம்பெனிக்குள் மது.

அதுவும் ஒரு பொறுப்புள்ள அதிகாரியிடம்!

# 2

‘மாதங்களில் வைகாசி பல சிறப்புகளை உடையது. இந்த மாதத்தில்தான் பெரும்பாலான ஊர்களில் உள்ள பிரசித்தி பெற்ற கோயில்களில் தேரோட்டம் நிகழும். இதனால் தேர் இழுப்பதற்காக, வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்காமல், ஜனங்களும் வீதிக்கு வருவார்கள். எங்கு பார்த்தாலும் பக்தர் கூட்டம் காணப்படும். அது மட்டுமல்ல… இந்த மாதத்து விசாக நட்சத்திர தினத்துக்கு பல சிறப்புகள் உண்டு. அனைத்திற்கும் மேலாக இந்த மாதத்தில் தான் அக்னி நட்சத்திரம் எனப்படும் கொடிய வெப்ப காலம் முடிவுக்கு வந்து அடுத்த கட்டம் துவங்குகிறது.

அக்னி நட்சத்திர வெப்ப காலம் என்பது உயிர்களை வருத்தும் காலமாக மட்டுமே கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் அக்னி நட்சத்திர காலம் மட்டும் இல்லாவிட்டால் பூமியில் தாவரங்களில் தோன்றியிருக்கும் பல விஷப் பூச்சிகள் மற்றும் நுண்ணுயிர்கள் அழிந்திடாத ஒரு நிலை ஏற்பட்டு தாவரங்களிடையே ஒரு மலர்ச்சி

இல்லாமல் போய் விடும். இக்காலத்தில்தான் பல வியாதிகளுக்குரிய கிருமிகள் அழிகிறது. மனித உடலிலும் வியர்வை நாளங்கள் நன்கு செயல்படத் தொடங்குகிறது.

மொத்தத்தில் வையகமான இப்பூமி காசிபோல கேஷத்ரமாக மாறும் நாட்கள். இந்த மாதத்தில் தேரோட்ட வடிவில் வருவதால் காரணப் பெயராகவே 'வைகாசி' வந்தது என்றும் சிலர் கூறுவர்!'

பொற்றாமரைக் குளத்தங்கரையில் அமர்ந்திருந்த தமிழிற்குள், அலுவலகத்தில் தன் அறைக்குள்ளேயே குடித்த அந்த அதிகாரியின் முகம் முண்டியடித்துக் கொண்டேயிருந்தது.

இப்படி ஒரு மோசமான பழக்கம் உடையவர் எப்படி நல்ல ஓர் அதிகாரியாகத் திகழ முடியும் என்கிற கேள்வியும் அவனுக்குள் குடைந்து கொண்டிருந்தது.

அவனால் கடவுளைப் போல கருதப்படும் அவனது சேர்மன் கைலாசம், மதுவிற்கு மட்டுமல்ல... எல்லா விதமான தீய பழக்கவழக்கங்களுக்கு எதிரானவர். உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள நல்ல ஒழுக்கம் அவசியம் என்று சொல்பவர் மட்டுமல்ல. அதை அவரும் நடைமுறையில் கடைபிடித்து வருபவர்.

சேர்மன் கைலாசத்துக்கு அறுபது வயதாகிறது.

ஆனால் ஐம்பது வயதுக்காரர் போலத்தான் இருப்பார் அந்த இளமைக்கும், தேஜஸ{க்கும் காரணம் அவரது ஒழுக்கம். ஆனால் தமிழின் நண்பர்கள் 'என்கிட்ட கோடி கோடியா இருந்தா நான்கூட தளதளன்னு தக்காளிப்பழம் போல இருப்பேன்...' என்று அவனுக்கு எதிராகத் தான் பேசுவார்கள்.

பணக்கார தளதளப்புக்கும், பண்பட்ட ஒரு தளதளப்புக்கும் தமிழிற்கு நன்றாகவே வேற்றுமை தெரியும். தமிழ் மனைவி சாருலதா கூட சேர்மனின் புகைப்படத்தை பார்த்துவிட்டு 'உங்கள் சேர்மன் நல்ல தேஜஸ் கொண்டவர்' என்று பொருத்தமான வார்த்தைகளில் குறிப்பிடுவாள்.

ஒழுக்கம் இருந்தால் தேஜஸ் என்ன எல்லாமே தேடி வரும் என்பதற்கு அவர் ஓர் உதாரணம். அப்படிப்பட்டவரின் நிறுவனத்துக்குள் ஒரு மதுப் பழக்கம் உடைய அதிகாரி!

தமிழிற்குள் உவா முள்ளாக அந்த காட்சி உறுத்திக் கொண்டே இருந்தது.

கோயிலுக்கு வந்த இடத்தில் மினாட்சியிடம் கூட பெரிதாக மனம் ஒன்ற முடியவில்லை. ஒரு வாரப் பத்திரிக்கையில் இருந்து சிறுகதை கேட்டு– அதன் துணை ஆசிரியர் கூட போன் செய்திருந்தார்.

சாதாரணமாக குளத்தங்கரையில் தமிழிற்கு நிறையவே கருக்கள் கிடைக்கும். ஒரு முறை வயதான பெரியவர் அந்த குளத்தங்கரையில் அவனிடம் வந்து தன்னை தன் பிள்ளைகள் அடித்து துரத்தி விட்டதாகக் கூறி அழுது கை நீட்டினார். ஒரு பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு தான் விட்டார். அடுத்த சில மணி நேரத்தில் தமிழ் வீடு திரும்பும் போது அவரை குடி போதையில் ஒரு பிளாட் ஃபாரத்தில் பார்க்க நேர்ந்தது. குடிப்பதற்காக அவர் பொய் சொல்லியிருக்கிறார் என்பது அந்த நொடியே அவனுக்கும் புரிந்து விட்டது.

தமிழ் வரையில் ஏமாறுவதும் பிடிக்காது, ஏமாற்றுவதும் பிடிக்காது. அந்த நொடி அவனுக்கு வந்த கோபத்துக்கு ஒரு அளவேயில்லை. மறுநாள் திரும்ப அவரைப் பொற்றாமரைக் குளத்தடியில் பார்த்தபோதே ஒரு முடிவுக்கும் வந்து விட்டான். அவரைப் பாய்ந்து பிடித்தவன் அவரைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போனான். ஸ்டேஷனில் தமிழ் சொன்னதை ஒருவரும் பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை.

“நீங்கதான் சார் உஷாரா இருக்கணும். இதுக்காக இந்த ஆளைப் புடிச்சு உள்ள போட்டா இந்த ஆள் ஜெயிலுக்குள்ளையே பிச்சை எடுப்பான். தேவையா…? உடுங்க… ஒருநாள் இல்ல ஒருநாள் குடிச்சிட்டு ஓடுற லாரியில பஸ்சுல அடிபட்டு சாகட்டும். அதுதான் இவனுக்கெல்லாம் முடிவு.”

- என்றார் ஸ்டேஷன் கான்ஸ்டபிள். மிகமிக பொறுப்புள்ள பேச்சு. தமிழிற்கு போலீஸ் ஸ்டேஷன்களின் நிஜமான முகங்கள் தெரியத் தொடங்கியதும் இப்படிபப்பட்ட சந்தர்ப்பங்களில் தான்!

அதன் பிறகு அந்த கான்ஸ்டபிள் சொன்னது போலவே நடந்ததுதான் கொடுமை. அந்த குடிகார வயதானவர் டவுன் பஸ் சக்கரம் ஒன்றின் கீழ் இரத்தக் கூழாக கிடந்தார். அந்த காட்சியைப் பார்த்த தமிழ்ச் செல்வனுக்கும் ‘பகீர்’ என்றது. கான்ஸ்டபிள் சொன்னது பலித்து விட்டதா இல்லை தன்னால் அந்த குடிகார பெரியவரைக் காப்பாற்ற முடியவில்லையா? எதனால் இப்படி ஆயிற்று என்கிற கேள்வியும் அதன் தாக்கங்களும் சேர்ந்து தமிழிடம் ஒரு நல்ல சிறு கதையாயிற்று.

கதையில் அவன் ஒரு நல்ல மாற்றத்தை செய்து கொண்டான். அந்த

குடிகாரப் பெரியவரை அவன் போலீசுக்கு அழைத்துச் சென்று ஒப்படைக்கவில்லை. மாறாக தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அவரை வீட்டு தோட்டக் காரனாக்கி விடுகிறான்.

அவரும் தனக்கொரு புதிய வாழ்க்கை கிடைத்த மகிழ்ச்சியில் அந்த தோட்டக்கார வேலையை பரிகாரம் போல ஏற்றுக் கொள்கிறார்.

அந்த கதைக்கு கூட ஆயிரம் ரூபாய் பரிசு கிடைத்தது. வாழ்வில் அவன் பார்க்கும் சம்பவங்களுக்கும் இப்படி பல நல்ல கதைகள் ஒளிந்திருப்பது உண்டு. குடிகார அதிகாரியும் ஒரு கதைக்கான கருவாகப் போகிறாரா இல்லை கம்பெனிக்கான எருவாகப் போகிறாரா- என்பது மட்டும் அவன் வரையில் குழப்பமாகவே இருந்தது!

இரவு நேரம்!

படுக்கச் செல்லும் முன் ஏதாவது ஒரு புத்தகத்தில் பத்து பக்கமாவது படித்துவிட்டு அதைப்பற்றி சிந்தனை செய்தபடி படுத்துத் தூங்குவதுதான் தமிழிற்கு வழக்கம்.

“விளக்கை அணையுங்க… வெளிச்சமா இருந்தா நான் எப்படி தூங்கறதாம்?”– என்று பத்து நிமிடத்திற்கு கொருமுறை தமிழின் மனைவி முனங்குவாள். அன்று தமிழ் புத்தகமும் படிக்கவில்லை. தூக்கமும் வரவில்லை. கையை கட்டிக் கொண்டு காலை நீட்டியவனாக அப்படியே அமர்ந்து விட்டான்.

தூங்கும் முன் ஒரு டம்ளர் பால் எப்பொழுதும் உண்டு. தமிழின் மனைவியும் பாலுடன் வந்தாள். அவன் தீவிரமாக சிந்தனையில் இருப்பதை கவனித்தாள். இருபது வருட தாம்பத்யம் - அவன் எப்படி என்பதை அவளுக்கு எப்பொழுதோ கற்றுக் கொடுத்து விட்டது.

அவன் அப்படி இருக்கிறான் என்றாலே அவனுக்குள் ஏதோ ஒரு நாவலுக்கான கதை முற்றித் திரண்டு கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் சமுதாயத் தாக்கம் ஏதாவது ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும்.

பாலை வாங்கிக் கொண்டவன் குடிக்காமல் அப்படியே வைத்துக் கொண்டிருந்தான். அவளும் அவனை கலைக்க ஆரம்பித்தாள்.

“என்னங்க?”

“உம்…”

“பாலைக் குடிங்க…”

“ஓ… பால் இருக்கா கைல.”

“சரிதான்… கைல பால் இருக்கறதுகூடத் தெரியாத அளவுக்கு அப்படி என்ன யோசனை…”

“ஒண்ணுமில்ல சாரு…”

“நீங்கதான் சொல்லியிருக்கீங்க… ஒண்ணுமில்லேன்னு யாராவது சொன்னா ஏகப்பட்ட விஷயம் அதுக்குள்ள இருக்குன்னு…”

“எனக்குள்ளயும் இப்ப ஏகப்பட்ட விஷயம் இருக்கு. அதோட சுமையை எந்த அளவுக்கு தாங்க முடியும்னு தெரியல…”

“எதையும் மனசு விட்டு பேசினா அதுக்கு ஒரு வழி கிடைக்கும்னு நீங்களே ஒரு கதைல எழுதியிருக்கீங்க…”

“இது கம்பெனி விஷயம் சாரு… உன்கிட்ட பேசறதால ஒரு நன்மையும் இல்லை…”

“அது எப்படி உங்களுக்குத் தெரியும்…”

“என்ன சாரு நீ… நான் சொல்ற பிரச்சனைகளை உன்னால சரியா புரிஞ்சுக்க முடியுமாங்கறதே எனக்கு சந்தேகம். அடுத்து… நான் பேசின பிறகு என் கவலை உன்னையும் தொத்திக்கும். தேவையா உனக்கு?”

“பெட்டர் ஹாஃப்னு எனக்கு இன்னொரு பெயர் உண்டு. சந்தோஷத்தை மட்டும் பகிர்ந்துக்கற ஜென்மம் நான் இல்ல. எதுவா இருந்தாலும் சும்மா சொல்லுங்க…”

- சாருலதா அவனை விடுவதாக இல்லை. அவனும் அவளிடம் அதற்கு மேல் வாக்குவாதம் செய்யாமல் அவன் மனபாரத்தை இறக்க ஆரம்பித்தான்.

“சாரு… கம்பெனி இப்ப முந்தி மாதிரி இல்லை. கம்பெனிக்குள்ள இப்ப நிறைய ஊழல்!”

“கம்பெனிக்குள்ள ஊழலா… அப்ப கம்பெனி பெரிய அளவுல வளர்ந்துகிட்டு இருக்குன்னு அர்த்தம்.”

“நான் ஒண்ணு சொன்னா நீ ஒண்ணும் சொல்றியே சாரு…”

“சேச்சே… நான் சரியான அடிப்படை காரணத்தை சொன்னேன். ‘நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்’னு ஒரு பழமொழி கூட உண்டுங்க. நாம இப்ப எங்க நல்லதை நினைக்கறோம். நம்ம காதுல விழற விசயங்களும் தப்பு தப்பா தானே இருக்கு? பேப்பரை திறந்தாலும் சரி சாதனைகள் பத்தி பேசறத விட வேதனைகள் - ஊழல் - கொலை – கொள்ளைன்னு இதெல்லாம் தானே அதிகம். அப்ப அதிகமா எது நம்மை தாக்குதோ அதுவாதானே நாமளும் மாறுவோம்.”

- சாருலதா மிக இயல்பாக அதே சமயம் மிக அழுத்தமாக ஒரு புதிய கோணத்தில் பேசினாள்.

“போதும் சாரு…உளறாதே! நாமளும்னு ஏன் உன்னை என்னையெல்லாம் சேர்த்துக்கறே. எந்த ஊழலையும் நான் நேற்றும் செய்யல. இன்னிக்கும் செய்யல. நாளைக்கும் செய்ய மாட்டேன்.”

- அவன் கோபிக்க ஆரம்பித்தான்.

“அட என்னங்க நீங்க… கோவிச்சுக்கிட்டீங்களா? நான் உங்கள சொல்லலை. சொஸைட்டிய சொன்னேன்.”

“அது என்னால ஒத்துக்க முடியாது. தப்புக்கு இப்படிக் காரணம் கண்டுபிடிச்சு சமாளிக்கிறது தப்புக்கெல்லாம் பெரிய தப்பு.”

“அது எனக்கும் தெரியும். ஆனா நான் சொன்னதுதான் சத்தியம். இதை எப்படி மாத்தறதுன்னு தான் நாம யோசிக்கணும். ஆமா… அப்படி யார் ஊழல் பண்ணினது… அதுவும் மிஸ்டர் க்ளீன் - உங்களுக்குத் தெரியற மாதிரி…?”

“வாட் டு யூ மீன்?”

“ஐ மீன்… இன்னிக்கு யாரும் மாட்டிக்கற மாதிரி கேனத்தனமால்லாம் தப்பு பண்றதில்லை. இந்த கம்ப்யூட்டர் காலம் - எவிடென்ஸ் இல்லாம எப்படி எல்லாம் தப்பு பண்ணலாம்னு நிறையவே சொல்லி கொடுத்திருக்கு. அதான் அப்படி கேட்டேன்.”

“நீ சொல்றது வாஸ்தவம்தான். நான் கேள்விப்பட்ட எந்த ஒரு விஷயத்துக்கும் எவிடென்ஸே கிடையாதுதான். என் கவலைக்கு அதுவும் ஒரு காரணம்…”

“ஆமா நான் தெரியாமத்தான் கேக்கறேன். நீங்க உங்க கம்பெனில ஒரு கீப்பரா இல்ல… நீங்கதான் சேர்மன் அண்ட் மேனேஜிங் டைரக்டரா?”

“அடுத்து நீ என்ன கேப்பேன்னு எனக்குத் தெரியும். ‘உன் வேலையை ஒழுங்கா பாருய்யா… இது முதலாளி பட வேண்டிய கவலை. உனக்கு எதுக்கு வேண்டாத இந்த வேலை’ன்னு தானே கேக்கப் போறே…?”

“பரவாயில்லியே… கரெக்டா புரிஞ்சுக்கிட்டீங்களே…”

“நீ சொல்றதும் வாஸ்தவம்தான் சாரு. ஒரு கோணத்துல இது வேண்டாத வேலைதான். அநாவசியான கவலையும் கூட… நாம நம்ம வேலையை ஒழுங்கா பார்த்துட்டு போவோம். தப்பு பண்றவங்கள ஆண்டவன் ஒருநாள் தண்டிப்பான்னு சொல்லிட்டு சாதாரணமா ஒதுங்கிப் போக என்னால முடியல சாரு.

ஒரு எழுத்தாளனா – நடக்கறதை எல்லாம் பார்க்கும் போது என் இரத்தம் கொதிக்குது சாரு…”

“தெரியும்… கடைசில ‘நான் ஒரு ஸ்டோர் கீப்பர் மட்டுமில்ல. சமூக பிரக்ஞையுள்ள எழுத்தாளன்’ அப்படி இப்படின்னுதான் சொல்வீங்க. அதுலையும் உங்க முதலாளியை நீங்க கடவுளுக்கும் மேல பாக்கறதால இந்த மாதிரி விஷயங்கள் உங்களால சாதாரணமால்லாம் எடுத்துக்க முடியாதுங்கறதும் தெரியும்.’

“சரி நான் உங்களை ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே…”

“என்ன சாரு…?”

“இந்த ஊழலை எதிர்க்கப் போறீங்களா?”

“பின்ன?”

“எப்படி?”

“அதைத்தான் யோசிச்சுக்கிட்டிருக்கேன். அதுமட்டுமில்ல சாரு… இந்த மாதிரி ஊழல்கள் நடக்காம தடுத்து எல்லாரோடையும் ஒரு நல்ல உறவை ஏற்படுத்திக்க வேண்டிய பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபிஸர் ஒரு பெரிய ‘தண்ணி வண்டி’யா இருக்கான். அந்த ஆள் தண்ணி அடிக்கறதை வேற நான் என் கண்ணாலேயே பாத்துட்டேன் சாரு.”

“நீங்களே ஒரு கதைல ‘தண்ணி அடிக்கறதுங்கறது ஒரு பலவீனம். அது ஒண்ணும் பெரிய உலகமகா குற்றம் கிடையாது’ன்னு எழுதியிருக்கீங்க. உங்களுக்கே தெரியும் சாதாரணமா தண்ணி அடிக்கறது… இதையா ஒரு பெரிய விஷயமா நினைச்சு பேசறீங்க?”

“நான் எதை சொன்னாலும் என்ன கதையை சொல்லியே பதில் சொல்றியே சாரு. நான் சொல்றதை முழுசா கேட்டுட்டு பேசு. சானிடரில ஒர்க் பண்ற ஸ்வீப்பர்ஸ்… அப்புறம்… மயானத்துல பிணங்களோட வேகற புலையன், இதுபோக மார்ச்சுவரில கிடந்து கஷ்டப்பட்றவங்களுக்கெல்லாம் மதுதான் ஒரு சரியான மாற்று மருந்தே. அது இல்லேன்னா அவங்களால செயல்படவே முடியாதுங்கறதும் எனக்குத் தெரியும். ஆனா ஒரு பொறுப்புள்ள அதிகாரி தான் பொறுப்பேத்துகிட்ட முதல் நாளே – தான் பொறுப்பை எடுத்துகிட்ட ஆபீஸ்லையே தண்ணி அடிக்கறது எவ்வளவு பெரிய தப்பு தெரியுமா?”

- தமிழ்ச்செல்வன் ‘தெரியுமா?’ என்று ஆவேசமாக கேட்டு முடித்த போது மணி பதினொன்றடித்தது. அது அடித்து முடிக்கட்டும் என்று அமைதியாக காத்திருந்த சாருவும் அதன்பின்,

“நீங்க அநாவசியமா வேலியில போற ஓணானை எடுத்து வேட்டியில விட்டுக்கறீங்க…” என்றாள்.

“நீ என்ன சொல்றே சாரு…?”

“பேசாம படுங்க. இந்த மாதிரி கவலைகளை தயவுசெய்து மூட்டை கட்டி வையுங்க. நம்ம பையன் எஞ்சினியரிங் காலேஜ்ல படிக்கறான். அவனுக்கு ஃபீஸ் வேற கட்டணும். அது போக எல்.ஐ.சி.ட்யூ, டெலிபோன் பில்னு ஏகப்பட்ட தேவைகள் இருக்கு.

பத்திரிக்கைல கதை கேட்டுருக்காங்க. அதை எழுதப் பாருங்க. நாலு காசாவது வரும். இதை எல்லாம் விட்டுட்டு இப்படி நீங்க கவலைப் பட்டா நோய் நொடிதாங்க வரும்.”– காலடியில் கிடந்த போர்வையை விரித்து நீட்டி தன்மேல் போர்த்திக் கொண்டே தான் சொல்ல நினைத்ததை சொல்லிவிட்டு சாரு படுத்துக் கொண்டாள்.

தமிழிற்கு எரிச்சலாய் வந்தது.

ஒரு காலத்தில் ‘உனக்கெதுக்குடா ஊர் வம்பு!’ என்று அவன் அம்மா கேட்டிருந்தாள். இப்போது அந்த இடத்தில் மனைவி!

ஆட்கள் மட்டும் மாறி இருக்கிறார்கள்.

ஆனால் ராகம் மாறவே இல்லை. அவனுக்குள் எரிச்சலோடு ஓர் ஆவேசமும் துளிர்விட்டது.

தமிழ் மாதங்களில் மூன்றாவது வரும் மாதம் ஆனி மாதமாகும். சித்திரை வைகாசியில் தகித்த வெயில் ஆனியில் தணிய ஆரம்பிக்கிறது. பருவ நிலையிலும் ஒரு மாற்றம் தொடங்குகிறது.

தமிழ் எழுத்துகளில் ‘ஆ’ என்கிற உயிரெழுத்து ஓங்கி உச்சரிக்கப்படுவதாகும். இதன் உட்பெருள் ‘பெரியது’ என்பதாகும். இந்த ‘ஆ’ என்கிற பெரிய பொருளின் தொடக்கத்திலேயே அடுத்தடுத்து ஆடி, ஆவணி என்று மூன்று மாதங்கள் வர உள்ளன. அவ்வகையில் ஆனிக்கு பெரிய அளவில் நீர் வரத்துக்கான சூழல் வானில் ஏற்படுகிறது என்பது பொருளாகும். இதை உத்தேசித்தே இம்மாதங்களில் தெய்வங்களின் சிலாரூபங்களுக்கு திருமஞ்சனம் எனும் குளிர்விக்கும் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

சிவாலயங்களில் இம்மாதத்தில் ஆனித் திருமஞ்சனம் எனும் நிகழ்வு சிறப்போடு நடைபெறும். இதன் எதிரொலியாக இறைவன் திருமேனி குளிரும். திருமேனி குளிர்ந்தால் உலகம் குளிரும். வெப்பம் அடங்கி மழை வரத் தொடங்கும். ஏகாந்தமான ஊஞ்சல் உற்சவங்களும் இம்மாதம் நடைபெறும்.

ஏனோ இம்மாதத்தில் பெரிய அளவில் நற்காரியங்களை யாரும் செய்வதில்லை. நிலத்தில் இறுதிக்கட்ட அறுவடை, மற்றும் நிலத்தை பண்படுத்துதல், கிணறுகளில் துர்வாறுதல் போன்றவை இம்மாதத்திலேயே நடைபெறுகிறது!

மறுநாள்!

ஆபிஸில் கேன்டீனில் காலை சாப்பிடும் போதே காதைக் கடிக்க ஆரம்பித்து விட்டான் வம்பு மன்னன் மோகன்குமார்.

“மாப்ள… ஏண்டா உம்முன்னு இருக்கே?”

“…”

“உன்னை சிரிக்க வைக்கறேன் பாக்கறியா?”

“…”

“டேய் இது வோர்ல்ட் கப் சீஸன்… ஒரு SMS வந்திருக்கு சொல்லவா?”

“…”

“டேய்… வாயைத் திறக்காட்டியும் ஒரு ‘உம்’ கொட்டலாம்தானே?”

“சாரி மோகன்குமார்… நான் உன்கிட்ட எதையும் கேட்டுக்கற நிலையில் இல்ல. ப்ளீஸ் என்னை விடு.”

“அதெப்படி… நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்றேன். நம்ம கேன்டீன்ல டீத்தூள் வாங்கின வகைல மட்டும் நம்ம டீ வெண்டர் ஜான்சன்கறவன் அம்பதாயிரம் அமுத்தியிருக்கானாம்… தெரியுமா உனக்கு,”

“ஆமா… ஜான்சன் ஒரு கேன கிறுக்கன் பாரு…

உன்னை மாதிரி ஆள் எதிர்க்க ‘உம்… பாத்துக்குங்கப்பா’ன்னு சொல்லிட்டு ஐம்பதாயிரம் அமுத்த…”

“போடா புடலங்கா… ஐயாவோட சம்பளம் மாசம் மூவாயிரம். அதுல பிடித்தம் போக கைல வாங்கறது ரெண்டாயிரம் சில்ரை. ஐயா போன வருஷம் வரை முந்நூறு ரூபா வாடகை வீட்ல இருந்தாரு. இன்னிக்கு அவன் வீட்டு வாடகையே இரண்டாயிரம். இது போக சல்லுன்னு ஓட்ட விக்டர்பைக், ஜில்லுன்னு தூங்க வீட்ல பெட்ரூம்ல ஸ்பிளிட் ஏசின்னு ஜெனரல் மேனேஜர் லெவலுக்கு ஸ்டேட்டஸ் மெய்ன்டெய்ன் பண்றான். மூவாயிரம் ரூபா சம்பளத்துல இதெல்லாம் எப்படிடா சாத்தியம்?”

-மோகன் குமார் மடக்கியதில் தமிழிடமும் ஒருவித தர்ம சங்கடம்.

“போதும் மோகன்குமார்… இந்த மாதிரி விஷயங்கள் காதுல விழும் போது எனக்கு ரொம்ப கவலையா இருக்கு. இந்த கம்பெனியோட எதிர்காலம் எதுல போய் முடியுமோன்னு தலைய சுத்துது.”

“அதுக்கென்ன பண்ண… டாப்ல இருக்கற தலைங்க சரியா இருந்தா கீழ இவன் மாதிரி ஆட்கள் சரியா இருப்பாங்க. அங்கதான் வேற டைப்ல எல்லாம் நடக்குதே..?”

“வேற டைப்லைன்னா?”

“உனக்குத் தெரியாதாக்கும்… இங்க இவன் டீத்தூளை மளிகை சாமான்ல அடிச்சா அங்க அவங்க சப்-காண்டிராக்ட், மெட்டீரியல் பர்ச்சேஸ்னு சாப்பிடறாங்க.”

“போதும்… இதுக்கு மேல எதுவும் பேசாதே. நல்லது எதாவது இருந்தா பேசு.”– என்று தமிழும் தற்காலிகமாக அவனுக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டு வேகவேகமாகக் கிளம்பிப் போனான்.

டிபார்ட்மெண்ட்டுக்குள் அவன் நுழைந்த போது வழக்கம் போல

அவன்தான் முதல் நபர். கெடிகாரத்தை பார்த்தான். மணி 8.50. ஒன்பது மணிக்கு ஷிப்ட் ஆரம்பம். அவனோடு சேர்ந்து எட்டு பேர் அந்த டிபார்ட்மெண்டில். அவ்வளவு பேரும் மிலிட்டரிகாரர்கள் போல மிகச் சரியாக ஒன்பது மணிக்கு ஃபேக்டரி பெல் அடிக்கத் தொடங்கும் போது தான் டிபார்ட்மெண்டுக்குள் நுழைந்தார்கள். நுழையும் போதே பத்து நிமிடம் முன்பாக நுழைந்து கம்ப்யூட்டரையும் ஆன் செய்து விட்டு வேலையைத் தொடங்கி விட்டிருந்த தமிழைப் பார்த்து ஒரு சிரிப்பும் சிரித்தார்கள். அதை தமிழும் கவனித்தான்.

இதெல்லாம் அங்கே தினசரி நடக்கின்ற ஒரு விஷயம்தான். அந்த கம்பெனிக்குள் தமிழைப் போல நாலு பேர் தேறினால் பெரிய விஷயம். மற்ற அவ்வளவு பேருக்குமே தமிழ் போன்றவர்கள் ‘படம் காட்டிகள்’ அதிலும் வீரபத்ரன் என்று ஒருவன் இருக்கிறான். அவனுக்கு தமிழ்ச் செல்வன் போல நொடிப் பொழுதைக் விரய மாக்காமல் வேலை பார்ப்பவர்களைக் கண்டாலே எரிச்சல் வரும்.

ஜாடை பேச ஆரம்பித்து விடுவான். “டேய் ஜோசப்பு… நீயும் இருக்கியே… உனக்கெல்லாம் உழைப்புன்னா என்னன்னு தெரியுமாடா…? பாரு நம்ம தமிழ்ச்செல்வனை… ஐயா உழைப்புக்கு இலக்கணம்…”– என்று கிண்டலாக ஆரம்பிப்பான். எல்லோரும் அவனுடன் சேர்ந்து கொள்வார்கள். சிலர் தமிழ்ச் செல்வனிடம் போய் வாயைப் பிடுங்குவார்கள்.

“டேய் தமிழ்… நான் தெரியாமத்தான் கேக்கறேன். இப்படி மாங்கு மாங்குன்னு வேலை செய்யறியே… உனக்கென்ன கம்பெனில தங்க மெடலா தரப் போறாங்க?”

“அப்ப ஒழுங்கா வேலை பார்த்தா மெடல் தரணும்னு சொல்றியா?”

“அப்படி சொல்லலை… எதுக்கு இப்படி வருத்திக்கிறே… நாம் மலையையே சாய்ச்சாலும் லேபர் கூட்டம்தான். வேணும்னா ஐம்பது நூறுன்னு இன்கிரிமென்ட் கிடைக்கும். உன்னால ஒரு மேனேஜராகவோ இல்ல ஆபீசராகவோ வரமுடியாதுடா…!”

“நான் மேனேஜராகறதுக்காக இங்க இப்படி வேலை பாக்கலை.

வாங்கற சம்பளம் செறிக்கணும். அதுக்காக வேலை பாக்கறேன். எனக்கு இங்க வேலை கிடைக்குமான்னு ஒரு காலம் இருந்தது. அப்ப சம்ளம் கூட வேண்டாம். எனக்கு வேலை தெரிஞ்சா போதும்னுதான் நான் நினைச்சேன். ஆனா சம்பளத்தோடையே வேலை கிடைச்சது.

அப்படியே படிப்படியாக சம்பளம் ஒசந்து இப்ப மாசம் 15000 ரூபா வருது. இப்படி ஒரு உயரம் எனக்கு கிடைக்கும்னு நான் கனவுல நினைக்கல. இது எனக்கு நிலைக்கணும். இது எனக்கு நீடிக்கணும். அதுக்கு இந்த கம்பெனி இன்னிக்கு இருக்கிற மாதிரியே எப்பவும் இருக்கணும். அதுக்காகத்தான் என் கடமையை நான் சரியா செய்யறேன். எனக்கு இப்படி செயல்பட்றதுல ஒரு இன்பம் இருக்குடா. தயவுசெய்து உங்க கருத்துகளை என்கிட்ட திணிக்கப் பார்க்காதீங்க ப்ளீஸ்…”

“இங்க பாருடா… நாங்க திணிக்கலை. யதார்த்தத்தை பேசறோம். இங்க நாம மாங்கு மாங்குன்னு வேலை செய்யறோம். ஆனா அதுக்கு தகுந்த சம்பளம் நமக்கு கிடையாது. ஆனா ஆபீசர்ங்கற போர்வைல ஏ.சி. ரூமுக்குள்ள ஆனந்த விகடனும் குமுதமும் படிக்கற ஒரு கூட்டத்துக்கு ஐம்பதாயிரம் அறுபதாயிரம்னு சம்பளம்… இதை நீ யோசிச்சு பார்த்தியா?”

“போதும்டா… என்னமோ பக்கத்துல நின்னு பார்த்த மாதிரி பேசாதீங்கடா… யாரோ ஒருத்தர் இரண்டு பேர் கதைப் புத்தகம் படிச்சிருக்கலாம். உடனே எல்லாரையும் சொல்றதா?”

“அப்படி இல்லடா… நம்மளையும் நம்ம அப்பா அம்மா பத்து மாசத்துலதான் பெத்தாங்க. அவங்களையும் பத்து மாசத்துலதான் பெத்தாங்க. அவங்களுக்கு மட்டும் ஏ.சி. கார்னு தடபுடல். ஆனா நாம ஃப்ளோர்ல உக்காரக் கூட கூடாது. நின்னுக்கிட்டே சாகணும்.”

“அதுக்கென்ன பண்ண… அவங்க ஸ்கூல் லைஃப்ல ஒழுங்கா படிச்சு மார்க் வாங்கினாங்க. அதனால B.E., M.E.,ன்னு சீட் கிடைச்சு அங்கேயும் சக்ஸஸ் ஃபுல்லா முடிச்சாங்க நீங்க ரஜினி படத்துக்கும், கமலஹாசன் படத்துக்கும் காலைக் காட்சிக்கு கட் அடிச்சிட்டு போனதுக்கு ப்ளஸ் டூ கூட தேறலை. அப்படியே அக்டோபர்ல எழுதி பாஸ் பண்ணி எப்படியோ தப்பி பிழைச்சீங்க. பருவத்துல முக்கியமான பருவம் மாணவ பருவம். அதை சரியா பயன்படுத்த தவறினா வாழ்க்கை தப்பாத்தான் அமையும். ஏதோ இந்த மட்டுல இவ்வளவு பெரிய ஒரு கம்பெனில நல்ல வேலை கிடைச்சு மாசச் சம்பளம் ஒண்ணு வாங்கறதை நினைச்சு சந்தோஷப்படுங்கடா…”

- தமிழ் இப்படித்தான் பதிலடி தருவான். அவனோடு மாரடித்தவர்களுக்கு ‘ஏண்டா பேசினோம்’ என்று இருக்கும். இதனால் தமிழ் அவர்கள் வரையில் அவர்கள் ஒரு தீவு.

அந்த தீவு அன்றும் ஒதுங்கித்தான் வேலை செய்து கொண்டிருந்தது. எல்லோர் வாழ்க்கையும் எப்பொழுதும் ஒன்றே போலவா போய்விடுகிறது! அதில் திடுக்கிடும் திருப்பங்களுக்கும் வளைவுகளும் வரத்தானே செய்யும்?

தமிழ் வரையிலும் அப்படி ஒரு திருப்பம் வந்து விட்டது.

அவனுக்கு பர்சனல் டிபார்ட்மெண்டில் இருந்து அழைப்பு.

“மிஸ்டர் தமிழ்ச் செல்வன்… நீங்க புது P.R.O. சாரை பாக்கணும்னு சொல்லியிருந்தீங்களா?”

“ஆமாம்”

“சார் இன்னிக்கு ட்யூட்டியில ஜாய்ன் பண்ணின இரண்டாவது நாள். நேத்து நீங்க டிபார்ட்மெண்ட்டுக்கு வந்துட்டு அப்படியே திரும்பிட்ட மாதிரி தெரியுது. இப்ப போங்க. சார் உங்களுக்காக காத்திருக்காரு.”

- தமிழை அழைத்தவர் ஒதுங்கிக் கொண்டார். ஆனால் தமிழ்ச் செல்வனுக்கு அவரை தேடிப் போய் வாழ்த்துக் கூற தயக்கமாக இருந்தது. முதல் நாள் பார்த்த அந்த காட்சி அவன் மனக்கண்ணில் ஓடியது. ‘ஒரு குடிகாரனாக – அதிலும் ட்யூட்டி டயத்திலேயே குடிக்கும் ஒரு குடிகாரனாக மனதில் பதிவாகி விட்டவரை என்னவென்று சொல்லி வாழ்த்துவது?

இன்னமும் நிறைய குடித்து இன்பமாக வாழுங்கள் என்று சொல்லியா?’ குழப்பத்தோடு கம்ப்யூட்டர் மானிட்டரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்தவன் இறுதியாக அந்த நபரைப் பார்த்து வாழ்த்து சொல்ல வேண்டும் என்பதையே மாற்றிக் கொண்டு விட்டான்.

கச்சிதமாக மோகன்குமார் வந்து கேட்டான்.

“தமிழ்… என்ன போகலை?”

“இல்லப்பா… வாழத்துங்கறது நல்ல மனுஷங்களுக்குப்பா.”

“முதல் நாளே வந்திருக்கிற பார்ட்டி ஒரு உதார் பேர்வழின்னு தெரிஞ்சு போச்சா…?”

தமிழ் அமைதியாக அதை ஆமோதித்தான்.

மோகன் குமாருக்கு குஷியாகிவிட்டது.

“டாப் மேனேஜ்மென்ட்டை சேர்ந்த எல்லாரையும் எப்பவும் தேவாதி தேவர்களாகத்தான் நினைப்பே. உன்கிட்டேயும் இப்ப ஒரு சேஞ்ச்… குட்” என்று கூறிவிட்டு விலகிக் கொண்டான்.

அதே சமயம் டிபார்ட்மென்டில் அந்த P.R.O ரகசியமாக பாட்டிலைத் திறந்து குடித்தபடி இருந்தான். அவ்வளவாக வாடையடிக்காத சரியான ஃபாரீன் சரக்கு… இருந்தும் ஓர் எச்சரிக்கையோடு பாக்குப் பொட்டலம் ஒன்றை விரித்துஅதையும் வாயில் போட்டுக் கொண்டான். கண்ணாடி திறப்பு வழியாக எழுந்து சென்று யாராவது கவனிக்கிறார்களா என்று ஒரு பார்வையும் பார்த்துக் கொண்டான்.

தொலைபேசி அமட்டியது. காதைக் கொடுத்தான். மறுபக்கமாக அந்த நிறுவனத்தின் மிகப் பெரிய பொறுப்பில் இருக்கும் அதிகாரி ஒருவர் பேசினார்.

“மிஸ்டர் வேலாயுதராஜன்!”

“யெஸ் சார்…”

“ஜாப்ல செட்டில் ஆயிட்டீங்களா?”

“யெஸ் சார்…”

“சரி… நான் சொன்னதெல்லாம் ஞாபகத்துல இருக்கு இல்லையா?”

“இருக்கு சார்…”

“நாளைக்கு அந்த பகுதி ஆளும் கட்சி மாவட்ட செயலாளர் வருவார். அவருக்கு ஒரு ஐந்து லட்சத்தை பிரீஃப் கேஸ்ல வெச்சு கொடுத்துடுங்க. சஸ்பென்ஸ் அக்கவுண்ட்ஸ்ல அக்கவுண்ட்ஸ் மேனேஜர்கிட்ட பணத்தை வாங்கிக்குங்க. அப்படியே அவர் வவுச்சர்ல கையெழுத்து கேட்டா போட்டுடுங்க. இந்த பணம் கொடுக்கற விஷயம் ரொம்ப கான்ஃபிடன்ஷியல்… இந்த பணம் அவங்களோட தேர்தல் நிதி.”

“ஓ.கே.சார்… நான் பாத்துக்கறேன் சார்…”

-வேலாயுதராஜன் என்று டாப் லெவலால் அழைக்கப்பட்ட அந்த P.R.O போனை வைத்து விட்டு “வந்து உட்காரக்கூட இல்லை. அதுக்குள்ள அரசியல்வாதிக்கு என் கையால் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கு. ஹ{ம்… பேசாம நானும் அரசியல்வாதியா ஆகியிருக்கலாம்.” என்று முணுமுணுக்க ஆரம்பித்தான்.

# 4

‘மாதங்களில் ஆடி மாதம் தனிச் சிறப்பு கொண்டது. ஆடி மாதம் ஒரு காற்றுக் காலமாகும். சித்திரை, வைகாசி வெயிலால் உலர்ந்து போய் விட்ட மண்ணையும் தாவரங்களையும் இந்த மாதத்துக் காற்று ஆற்றி சமப்படுத்தும். அதுமட்டுமல்ல... இலையுதிர் காலத்து இலை தலை எல்லாம் காற்றில் அடித்துச் செல்லப்பட்டு இடமாற்றம் கொள்ளும். இதனால் மண்ணுக்குத் தேவையான சில அத்தியாவசிய சக்திகள் கிடைக்கும். அத்தோடு இந்த மாதத்தில்தான் மலைகளில் நன்கு மழை பெய்து ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும்.

குறிப்பாக ஆடி மாதத்து பதினெட்டாம் நாள் மிக விசேடமானது. இந்த தினத்தை ஆடிப் பெருக்கு என்பர். இந்த நாள் விருத்திக்கு உரிய நாளாகக் கருதப்படுகிறது. இன்று செய்யப்படும் நற்செயல்கள் விரிந்து பெருகும் என்பது நம்பிக்கை. அதேபோல இந்த மாதத்து வெள்ளிக் கிழமைகளுக்குத் தனி சக்தி உண்டு. அதற்கு காரணம் இந்த மாதம் ஒரு சக்தி மாதமாக கருதப்படுகிறது. எதனால் என்றால் இந்த மாதம்தான் சூரியன், சந்திரனின் வீடாகிய கடகத்தில் சந்திரனுக்குள் அடங்குவதைப் போன்றது. இதனால் இம்மாதத்து அமாவாசையும் தனிச் சிறப்பு பெறுகிறது. இன்று உலகின் மிகப் பெரிய நீர்வெளிக்குள் நாமும் மூழ்கி சில வினாடிகளாவது இருப்பது நம்மை சக்திப்படுத்தும். அதாவது கடலில் நாம் கலந்திருக்கும் போது சந்திர அம்சமாகிய கடல் பூரண பலம் பெற்று அது நம்மையும் தாக்கி நாமும் பலம் பெறுகிறோம்.

மொத்தத்தில் ஆடி மாதம் மண்ணாகிய பூமிக்கும் சரி, மனித உடம்புக்கும் சரி பெரும் நன்மைகளைச் செய்கிறது. இதை நாம் எப்படியாவது தேடிப் பெற்றிடவே ஆடி வெள்ளி விரதங்களும், அமாவாசை நீராடல்களும் சடங்குகளாக நம் முன்னோர்களால் அமைக்கப்பட்டன.

மறுநாள்!

அந்த மாவட்ட செயலாளர், கட்சிக் கரை வேட்டி மின்ன கம்பெனிக்குள் நுழைந்தார். அவருக்கு ஒரே தடபுடல் வரவேற்பு. வேலாயுதராஜனும் மாலை எல்லாம் வாங்கி வைத்திருந்தான். அதை அணிவித்து தனது தனியறைக்கு அழைத்துச் சென்று அந்த நபரை உட்கார வைத்து குஷிப்படுத்த தொடங்கி விட்டான்

“நீங்கதான் புதுசா வந்துருக்கற ஆபிசரோ?”

“ஆமாங்க… இனி நான்தான் இங்க ஆபீசர்.”

“இதுக்கு முந்தி எங்க இருந்தீங்க?”

“கோயம்புத்தூர் ASG பிஸ்டன்ஸ்ங்கற கம்பெனில…”

“ஓ… ASG பிஸ்டனா… பெரிய கம்பெனியாச்சே அது?”

“ஆமாமா… மாசம் அம்பது கோடிக்கு மேலல்ல டர்ன் ஓவர்…”

“இங்க எவ்வளவு?”

“இங்கையும் கிட்டதட்ட அப்படித்தான்…”

“கோயம்புத்தூர் கிளைமேட் ஜில்லுன்னு நல்லா இருக்குமே. அதை விட்டுட்டு இந்த காஞ்ச பய ஊருக்கு ஏன் வந்தீங்க?”

“எப்பவும் மேனேஜ்மென்ட் ஸ்டாஃப்ல ஒரு இடத்துல மட்டுமே இருந்துடக் கூடாது. எக்ஸ்பீரியன்ஸ் கூடக் கூட ஜம்ப் ஆகிக்கிட்டே இருக்கணும். பழைய கம்பெனியை விட இங்க வருஷம் மூணு லட்சரூபா கூட சம்பளம் தரேன்னு சொல்லும் போது கோயம்புத்தூராவது ஜில்லுங்கற க்ளைமேட்டாவது?”

“அதுவும்சரிதான்… வீட்ல ஒரு ஏ.சி. மெஷினை வாங்கி மாட்டிக்கிட்டா ஜில்லுன்னு க்ளைமேட் வீட்டுக்குள்ள வந்துட்டு போகுது…இதுக்காக கோயம்புத்தூர் போகணுமா என்ன?”

-அவர்கள் இருவரிடமும் இப்படித்தான் உரையாடல் சென்றது. நடுவில் அதில் ஒரு சிறு சிடுக்கு.

“இந்த அஞ்சு லட்சம் உங்க கம்பெனிக்கு ஒரு அல்பமான காசு. நாங்க 50 லட்சம் வரை எதிர்பார்த்தோம்.”

“அட நீங்க ஒண்ணு. எங்க கம்பெனி எம்.டி. சரியான கஞ்சன்னு நானும் கேள்விப்பட்டுத்தான் வேலைக்கு வந்திருக்கேன். நீங்க கவலைப்படாதீங்க. அப்பப்ப பயம்காட்டி கிட்டே இருங்க. நான் மேல பேசி உங்களுக்கு அப்பப்ப செட்டில் பண்ணிக்கிட்டே இருக்கேன்.”

“அட… நீங்க நம்ப பக்கமா? இதுக்கு முந்தி உங்க சீட்ல இருந்த ஆளு சரியான மொடமசுர் பிடிச்ச ஆள். நான் காந்திக்கு பேரன், நேருவுக்கு மாமன்னு பணமே தர முடியாதுன்னுட்டான். நானும் சுத்து வட்டாரத்தை பகைச்சுகாதீங்கன்னு எவ்வளவோ சொன்னேன். கேக்கல. அப்ப பார்த்து உங்க கம்பெனிக்குள்ள உள்ள ஒரு ஆள் வேலை பாத்துகிட்டு

இருக்கும்போதே ஹார்ட் அட்டாக்ல போய் சேர்ந்துட்டான். யாரோ ஒரு ஆபிசர் போட்டு கசக்கி பிழியப் போய்த்தான் ஹார்ட் அட்டாக்னு என் காதுக்கும் விஷயம் வந்துச்சி. இது போதாதா எனக்கு. பிடி கிடைச்சாச்சுல்ல. உங்க M.D. க்கு ஒரு லெட்டரை தட்டி விட்டேன். அவர் அப்படியே அதை அடுத்த நபருக்கு தட்டி விட்டு இப்ப அஞ்சு லட்சம் வந்துருக்கு. இதான் உங்க கம்பெனி லட்சணம்.'

-அந்த மாவட்ட செயலாளர் நன்றாகவே மத்தாப்பு கொளுத்தினார். வேலாயுதராஜனும் அப்படியே இறுக்கமாக ஒரு பிணைப்பை இதுதான் சாக்கு என்று உருவாக்கிக் கொண்டான்.

'விடுங்க… எதுக்கு பழைய குப்பைய கிளறிகிட்டு. எனக்கு நீங்க ஒத்துழைப்பு தாங்க. மிச்சத்த நான் பாத்துக்கறேன்."

"அட என்னங்க நீங்க… இவ்வளவு வெளிப்படையா பேசிட்ட பின்னால நான் சொல்ல என்ன இருக்கு ? உள்ள கொலையே நடந்தா கூட கவலைப்படாதீங்க நான் பாத்துக்கறேன்."

-ஒரு வழியாக செயலாளர் தான் எப்படி, தன் குணம் எப்படி என்பதை எல்லாம் கூறி முடித்து விட்டு பெட்டியோடு கிளம்பிப் போனார்.

வேலாயுத ராஜன் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை. அதற்கு எவ்வளவோ அர்த்தங்கள். செயலாளர் அகலவும் அக்கவுண்ட்ஸ் மேனேஜர் உள் நுழைந்தார்.

"குட் மார்னிங் சார்… ஒரு மாதிரி செயலாளரை சமாளிச்சு அனுப்பிட்டீங்க போல இருக்கே?"

"ஆமாம்… இனி எப்பவும் வாலாட்ட மாட்டான். அந்த மாதிரி அடக்கி அனுப்பியிருக்கேன்."

"பெரிய ஆள் சார் நீங்க… பழைய ஆள் இந்த ஆளை உள்ளே விடமாட்டார்."

"அதான் இங்க குப்பை கூட்ட முடியலை. எனக்கு ஆடற மாட்டை ஆடிக் கறக்கதெரியும். பாடற மாட்டை பாடிக் கறக்கதெரியும். சரி… எங்க வந்தீங்க?"

"வவுச்சர்ல சைன் வாங்கிட்டு போக வந்தேன்."

"ஆமா… இந்த மாதிரி அநாமதேய அன்பளிப்புகளை எல்லாம் எந்த கணக்குல வைப்பீங்க?"

“அதை ஏன் சார் கேக்கறீங்க… மெஷின் பிரேக் டவுன், கம்பெனி முழுக்க வெள்ளையடிச்சோம், பெயிண்ட அடிச்சோம்ன்னு எதாவது ஒரு கணக்குல ஏத்திட வேண்டியதுதான்…”

அக்கவுண்ட்ஸ் மேனேஜர் பேசி கொண்டே வவுச்சரை நீட்டினார். அதில் கையெழுத்து போட பேனாவைத் திறந்த வேலாயுதராஜனுக்கு பகீர் என்றது. ஐந்து லட்ச ரூபாய்க்கு 50 லட்ச ரூபாய் தந்ததாக வவுச்சரில் இருந்தது.

“என்னாங்க அஞ்சுக்கு அம்பதுன்னு போட்டுருக்கு.”

“எனக்கு தெரியாதுங்க… டாப்ல உத்தரவு. நான் போட்டுருக்கேன்.”

“அப்ப மீதி 45 எங்க?”

“என்னங்க கேள்வி இது. உங்களுக்கு ஒரு அஞ்சு. எனக்கு ஒரு அஞ்சு. இப்படியே மீதி 45க்கும் மேல ஆள் இருக்காங்கல்ல…”

“கையெழுத்து போட்ற எனக்கு வெறும் அஞ்சா?”

“உள்ள நீங்க நுழையும் போதே நம்ம ஜி.எம். உங்களுக்கு எல்லாத்தையும் சொல்லியிருப்பாரே…”

“சொன்னாரு… ஆனா இவ்வளவு பெருசா அது இருக்கும்னு நான் நினைக்கல.”

“இப்ப என்னங்க… அஞ்சுங்கற இடத்துல ஏழோ எட்டோ எடுத்துக்குங்க. மிச்சத்த நான் பாத்துக்கறேன்.”

“அதுசரி… பின்னால பிரச்சனை எதுவும் வந்துடாதே.”

“வரக்கூடாதுன்னு தானே எது எதுக்கு எப்படி எப்படி கணக்கு காட்டணுமோ அப்படி காட்ட நான் தயாராக இருக்கேன்.”

“அதுக்கில்ல… அந்த அரசியல்வாதியை சமாளிச்சவன் நான். கணக்குல அதை நேர்பண்றவர் நீங்க…”

“நமக்கு மேல ஒருத்தர் இதுக்கு வழிகாட்றவர். மொத்தம் மூணு பேர். மத்தவங்களுக்கு எதுக்கு பங்கு போகணும்?”

“இப்படியா உரிச்சு பேசுவீங்க. மத்தவங்க வாயை கட்ட வேண்டாமா… அதுக்கு தான்…”

“இது அவங்களுக்கு தெரிஞ்சாதானே?”

“அதுசரி… டாப்ல பல பேரைப் பத்தி உங்களுக்கு எதுவுமே தெரியல. எல்லாத்தையும் போகப் போக தெரிஞ்சுப்பீங்க…”

“என் கேள்விக்கு அப்ப இதுதான் பதிலா?”

“ஆமாம் சார். கொஞ்சம் பொறுமையா அட்ஜஸ் பண்ணி போங்க. இப்படி அப்பப்ப அஞ்சு ஆறுன்னு வாங்கியே டாப்புக்கு போயிடலாம். ஒரு வருஷம் இங்க இருந்தா போதும். டோட்டல் லைஃப்ல நீங்க செட்டில் ஆயிடலாம்.

-அந்த மேனேஜர், வேலாயுதராஜனுக்கு நன்றாகவே ஆசை காட்டினார்.

அவன் கண்களிலும் ஒரு பழுத்த பழத் தோட்டத்துக்குள் பெரிய கூடையோடு புகுந்துவிட்ட குஷி.

“ஆங்… உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும். இந்த கம்பெனி எம்.டி. கைலாசம் பத்தி நான் நிறையவே கேள்விப் பட்டிருக்கேன். அவர் எழுதின பல ஆர்ட்டிகிள்ஸையும் படிச்சிருக்கேன். சந்தேகமில்லாம பெரிய ஜீனியஸ்னுதான் தோணுது.

“அதுக்கென்ன இப்போ…?

“இல்ல… இந்த எக்ஸ்ட்ரா சமாசாரம் அவர் வரைக்கும் போனா…”

“போனாதானே?”

“அப்ப போகாதா?”

“அட நீங்க வேற… அவரை நெருங்கறது அவ்வளவு சுலபம் கிடையாது.அடுத்து அவருக்கு அடுத்தவங்களை குறை சொல்ற யாரையும் பிடிக்காது.”

“அதனால் எவ்வளவு தப்பு நடந்தாலும் அவர் கவனத்துக்கு போக வாய்ப்பு இல்லைன்னு சொல்றீங்க…”

“ஆமா… மீறி போனாலும் டாப்ல சிலர் இருக்காங்க. அவங்களுக்கு அவரை சமாளிக்க தெரியும்.”

“இது அவ்வளவு ஸ்ட்ராங்கான ஒரு பதிலா தெரியலியே.”

“சாரி எனக்கு தெரிஞ்சதை சொல்லிட்டேன். எனக்கும் உங்கள

மாதிரியே சந்தேகங்கள் உண்டு. நான் வேகமா செட்டில் ஆக ஆசைப்பட்றது என் பொண்டாட்டிக்கே பிடிக்கலை. பல நாள் திருடன் ஒரு நாள் பிடிபடுவான்க… அப்புறம் மானம் போயிடும் மரியாதை போயிடும்'னு அவ அப்பப்ப சங்கு ஊதிகிட்டே இருக்கா. இருந்தாலும் இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் எல்லா இடத்துலையும் கிடைக்காது. சேர்மன் நல்லவர்தான். அதுக்காக கம்பெனி லாபத்துல பங்கு கேட்டா தருவாரா? ஆகையால நாமளா எடுத்துக்கறதுதான் ஒரே வழி… இதனால அவருக்கும் ஒண்ணும் குறைஞ்சுடப் போறதில்லை. வருஷத்துக்கு ஆயிரம் அடிக்க முடிஞ்சா அதுவே பெரிசு இல்லையா?"

-அக்கவுண்ட்ஸ் மேனேஜர் பேசிய நியாயம் வேலாயுதராஜனுக்கே பிரமிப்பை அளித்தது. 'இந்த நபரெல்லாம் மத்திய அமைச்சராக இருந்து – அதிலும் நிதியமைச்சராக இருக்கும் பட்சத்தில் இந்தியாவில் எந்த மாநிலத்தை எந்த நாட்டுக்கு விற்பாரோ தெரியாது' என்றே தோன்றியது.

கூடவே ஓர் எச்சரிக்கை உணர்வும் ஏற்பட்டது.

"நல்லா பேசறீங்க… இருந்தாலும் ஜாக்ரதையா இருக்கணும். ஆமா இங்க இதை எல்லாம் மோப்பம் பிடிக்கற யாரும் கிடையாதா?"

"எதுக்கு கேக்கறீங்க?"

"ஒரு எச்சரிக்கைக்கு தான்…"

"இருக்காங்க. கம்பெனின்னு இருந்தா இப்படியும் அப்படியும் நாலுபேர் இல்லாமலா போயிடுவாங்க. செல்வராஜ்னு ஒருத்தன் இருக்கான். 'இந்தி ஒழிக, தமிழ் வாழ்க'ங்ற கோஷ்டி. சாதாரண மெஷினிஸ்ட். ஆனா வேலை பாக்க மட்டும் வணங்காது. பயலுக்கும் நம்மைப் போலத் தான் தாட். கமிஷனுக்கு வழி இருக்கற இடத்துல போய் உக்காந்துடணும்கறதுதான் அவனுக்கு ஒரே குறிக்கோள். யார்கிட்ட இருக்கற எந்த நல்லதும் இவனுக்கு தெரியாது. ஆனா கெட்டது எப்படித்தான் தெரியுமோ தெரியாது. உங்க பேண்ட்ல பட்டன் சரியாப் போடலைன்னா அதைக்கூட நோட் பண்ணி நாலு பேர்கிட்ட பேசறவன். இவனுக்கு ஒரேபாலிசி: 'அதிகாரி கழுதையா இருந்தாலும் காலைப்பிடி; தொழிலாளி அந்த மகாவிஷ்ணுவாவே இருந்தாலும் எட்டி உதை' ங்கறது தான்.

இவனுக்கு எங்க விஷயங்கள் கொஞ்சம் தெரியும். பதிலுக்கு அவன் வேலை பாக்காம சுத்தி வர்றதை நாங்களும் கண்டுக்கறதில்லை.

அடிக்கடி லீவு போடுவான். அதையும் கண்டுக்க மாட்டோம்.”

“அப்ப உருப்படியா ஒருத்தன் கூட கிடையாதா?”

“நீங்க கேக்கறத பார்த்தா...?”

“நான் இப்ப இருந்தே ஜாக்ரதையா இருந்துக்க விரும்பறேன். அதான் கேக்கறேன்.”

“ரொம்ப பயப்படறீங்க. நான் திரும்பவும் சொல்றேன். இங்க பயப்பட பெருசா யாரும் இல்லை. தமிழ் செல்வன்னு ஒருத்தன் இருக்கான். இவனுக்கு நம்ம எம்.டி.தான் கடவுள். உண்மையிலேயே ரொம்ப நல்ல பையன். எம்.டி.க்கு கூட தமிழ்ச் செல்வன்னா ஒரு மரியாதை உண்டு. இவன் கிட்ட மட்டும் நீங்க கவனமா இருந்துட்டா போதும்.”

“அப்ப வேற யாராலும் எந்த பிரச்சினையும் கிடையாது. அப்படித்தானே?”

“நம்புங்க... இங்க எல்லாருக்கும் ஒரு விலை இருக்கு. எல்லார்கிட்டேயும் தப்புங்களும் இருக்கு. அதைத் தொட்டா போதும் ஓடியே போயிடுவாங்க. கவனமா இருக்க வேண்டிய ஒரே நபர் தமிழ்ச் செல்வன்கற தமிழ்தான்...”

-அக்கவுண்ட்ஸ் மேனேஜர் இதற்கு மேல் பேச எதுவும் இல்லை என்பது சீட்டை விட்டு எழுந்து கொண்டார்.

வேலாயுதராஜனும் மனதுக்குள் ‘யார் அந்த தமிழ்ச்செல்வன்?’ என்கிற கேள்விக்குள் விழுந்தான்!

## 5

மாதங்களில் ஆவணி – **‘ஆ’** வரிசையில் தொடங்கிய ஆனி**,** ஆடி மாதங்களின் போக்கின் விளைவுகளை சுமந்து அதை திரட்டித்தரும் ஒரு மாதமாகும்**.** இந்த மாதத்தில் வரும் பிரதான பண்டிகைகள் வரலட்சுமி விரதமும்**,** ஆவணி அவிட்டமும் ஆகும்**.** ஆவணி அவிட்டத்துக்கு அடுத்த நாள் காயத்ரி ஜெபம் எனப்படும் ஜெபத்துக்குரிய உபவாச நாள்**.** இந்த நாளில் முதல் நாள் ஆவணி அவிட்டத்தில் பூணூல் தரித்த பிராமணர்கள் காயத்ரி தேவியை பெரிதும் உபாசனை செய்வார்கள்**.**

பூ நூல் என்பதற்கு பருத்தியாகிய பூவில் இருந்து வந்த நூல் என்பதும்

ஒரு பொருள். பருத்தி நூல் ஆடையாகி மனித சமுதாயத்தின் மானத்தைக் காக்கிறது. இதே பருத்தி நூல்தான் ஒரு பிராமணன் மார்பில் தவழ்ந்து, 'அவன் வேதங்களாகிய நூல்களை எல்லாம் கற்று அதன்படி நடப்பவன் என்று சொல்லாமல் சொல்கிறது.

இப்படிப்பட்ட பூணூலை இம்மாதத்து அவிட்ட நட்சத்திர தினத்தில் அணிவதன் பின்னே பலவித காலக்கணக்குகள் உள்ளன. ஆண்களுக்கு ஆவணி அவிட்டம் என்றால் பெண்களுக்கு அவர்களின் தாலி பாக்கியத்துக்கு வலு சேர்க்கும் வரலட்சுமி விரதம்.

மொத்தத்தில் இம்மாதம் நெறிப்படுத்தும் ஒரு மாதமாக விளங்குகிறது.

கேன்டீனில் சூடான பஜ்ஜியும் வடையும் போட்டது தெரியாதபடி பறந்து கொண்டிருந்தது. ஆளுக்கு ஆள் கூப்பனைக் கொடுத்து பஜ்ஜி, வடையை வாங்கி மென்று கொண்டிருந்தனர்.

வெளியில் ஒரு பஜ்ஜி இரண்டு ரூபாய்க்கு குறையாது. கேன்டீனில் அதன் விலை முப்பதே பைசா. தமிழ்ச்செல்வனும் அவ்வப்போது கேன்டீன் பக்கம் வந்து ஒரு காபி குடித்து போவான். அன்று வந்த போது வம்புப்பார்ட்டி மோகன்குமார் காபியை விட சூடாக வம்பளந்து கொண்டிருந்தான்.

மாவட்ட செயலாளருக்கு நல்ல வேட்டை அஞ்சு லட்சத்தோட போன அந்த ஆள் அதுல பாதியை அமுக்கி கிட்டு 'கம்பெனி இரண்டு லட்சம்தான் தந்திச்சு'ன்னு கட்சி ஆபிஸ்ல சொல்லிட்டான். இங்க நம்ம ஆளுங்க ஒரு கோடி ரூவா கட்சிக்கு நிதி கொடுத்ததா வவுச்சர் ரெடி பண்ணிட்டாங்க."

-எங்கே எப்படி மோப்பம் பிடித்தானோ தெரியாது. விஷயத்தைக் கூட்டியும் குறைத்தும் பஜ்ஜியை விட சுவையாக சொல்லிக் கொண்டிருந்தான்.

"ஏண்டா… என்னவோ பக்கத்துல இருந்து பாத்தவன் மாதிரி பேசறே…"

"அப்படித்தான் வெச்சுக்கோயேன்…"

"ஆனாலும் இப்படி ரீல் உடக் கூடாதுடா. எங்கையாவது ஒரு கட்சிக்குப் போய் ஒரு கம்பெனி கோடி ரூபாயெல்லாம் தருமாடா…?"

"எங்கடா தந்தாங்க… தந்தது அஞ்சு லட்சம் எழுதிகிட்டது கோடிய…"

"இருபது பங்கா ஏமாத்துவாங்க…"

“அது சரி… அந்த ஆள் பிரச்சினை பண்ண ஆரம்பிச்சா கம்பெனி நடத்த முடியுமா? டெல்லில இருந்துல்ல ரைடு வரும்…”

“வரட்டுமே… நம்ம எம்.டி.தான், நாம ரூல்ஸ் படிதான் நடக்கணும்’னு சொல்றார்ல…”

“சொல்றாரு… ஆனா இங்க எங்க இருக்கு ரூல்ஸ்? நீ ஒரு பேப்பர் வாங்கி ரூல் தடியை வெச்சு அதுல கோடு கோடா போட்டுக்கோ… அதுதான் ரூல்ஸ்…”

“அப்ப கம்பெனி எப்படித்தான் நடக்குதுங்கறே…?

“இவன் ஒருத்தன்டா… ஊர் கூடித் தேர் இழுக்க ஆரம்பிக்கிறாங்க. தேரும் ஓட ஆரம்பிச்சிடுது. அங்கங்க சிலர் கைவலிக்குதுன்னு இழுக்கறத நிறுத்தறதால தேர் ஓடாதா என்ன? இல்ல… அது யாரால ஓடுதுன்னுதான் சொல்ல முடியுமா… அப்படித்தான் நம்ம கம்பெனி ஓட்டமும்…”

-மோகன்குமார் சொன்ன உதாரணத்தில் உண்மை இருக்கத்தான் செய்தது. காபி குடித்தபடியே பக்கத்து நாற்காலியில் வந்து அமர்ந்த தமிழ்ச் செல்வனுக்கும் அவனது பதில் ஏராளமான வேலைகளை செய்யத் தொடங்கியிருந்தது. மௌனமான மனப்புழுக்கத்துடன் வேலையில் ஈடுபடத் பார்த்தான். ஆனால் பணியில் மனம் லயிக்கவில்லை. ஒரு ஸ்லோகன். ‘பெண்ணுக்கு கற்பு – பொருளுக்கு தரம்’ என்று இரண்டே வரிகளில்! அதைப் பார்க்கவும் விரக்தி கலந்த சிரிப்பு வந்தது. ‘எல்லாமே இங்கே ஏட்டளவில் மட்டும்தான் உள்ளது. நிஜத்தில் ஒரு பெரிய இடைவெளி… காரணம்? நண்பர்கள் பேசிக் கொண்டது போல ஈடுபாடு இல்லாத வேலை… எப்பொழுதும் ஒரு மனக்குறைபாடு இல்லாத வேலை… எப்பொழுதும் ஒரு மனக்குறைபாடு… துளியும் பெருமிதம் இல்லாத கூலிக்கு மாரடிக்கும் போக்கு…”

இப்பபடியே சிந்தித்துக் கொண்டே போனவன் இறுதியாக இது தன் சேர்மனான கைலாசத்துக்குத் தெரியுமா? என்றும் கேட்டுக் கொண்டான். அதற்கு மட்டும் ஒரு தெளிவான பதில் அவனுக்கு சட்டென்று கிடைக்கவில்லை.

வீடு!

தமிழின் மனைவி சாருலதா டி.வி பார்த்துக் கொண்டிருந்தாள். இன்றைய

மனித வாழ்க்கையில் சாப்பிடுவது-தூங்குவது-குளிப்பது-சிறுநீர்க் கழிப்பது போன்ற ஒரு தவிர்க்க முடியாத அன்றாடச் செயல்பாடு போல டி.வி. பார்ப்பதும் சேர்ந்து விட்டது.

கல்லூரியின் இறுதியாண்டுத் தேர்வை முடித்துவிட்டு ‘கெட் டு கெதர்’ பார்ட்டியிலும் கலந்துகொண்டு விட்டு அப்பொழுதுதான் திரும்பியிருந்தான்-தமிழின் மகன் கைலாசம்… தமிழ் வரையில் எம்.டி.! மகன் உள்ளே நுழைந்து உடை மாற்றிக்கொண்டு டைனிங் டேபிளில் போய் அமர்ந்ததைக் கூட கவனிக்கவில்லை சாருலதா. காரணம் சின்னத்திரை! அதில் ஒரு தொடரின் கதாநாயகி ஜெயிலுக்குள் வார்டனால் சித்திரவதை அனுபவித்துக் கொண்டிருந்தாள். சாருலதாவிற்குதானே அனுபவிப்பது போல ஓர் உணர்ச்சி. தமிழ் உள்ளே கட்டிலில் அண்ணாந்து பார்த்தபடி படுத்திருந்தான். மனம் முழுக்க கம்பெனியைப் பற்றியே எண்ணம். கைலாசம் அம்மா-அப்பா இருவரையும் பார்த்துவிட்டு எரிச்சலுடன் எழுந்து போய் டி.வி. ஸ்விட்சை அணைத்தான். டி.வி. திரை வெள்ளையாகவும் “அட கரண்ட் போயிடிச்சா… பாழாப் போன E.B.” என்ற ராகத்தோடு திரும்பிய சாருலதா கைலாசத்தைப் பார்த்து “உன் வேலை தானா?” என்று கேட்டு சிவுசிசுத்தாள்.

“பின்ன என்னம்மா நீ… நான் வந்து எவ்வளவு நேரமாச்சு தெரியுமா?”

“அப்படியா… நான் அபி ஜெயில்ல அவஸ்தைப் பட்றதை பாத்துகிட்டிருந்ததுல உன்னை கவனிக்கலடா தம்பி."

“எப்படிம்மா நீ கவனிப்பே… நானும் டி.வி.லயே வந்து அம்மா பசிக்குதுன்னு சொன்னாதான் உனக்கும் என்மேல் கவனம் திரும்பும்னு சொல்லு…”

“சேச்சே… உங்கப்பா வந்துடட்டும்… இரண்டு பேருக்கும் ஒட்டாவே சாப்பாடு போட்றேன்.”

“அம்மா, அப்பா எப்பவோ வந்தாச்சு. அங்க பார் படுக்கைல.”

-கைலாசம் சுட்டிக்காட்ட, சாருலதாவும் பெட்ரூமுக்குள் பார்த்தாள். தமிழ்ச் செல்வன் காதிலும் அவர்களின் பேச்சு விழுந்தது.

“அப்பா எழுந்து வாங்க… எனக்கு நல்ல பசி.”

-கைலாசம் அழைத்தான். தமிழும் எழுந்து இடுப்பு லுங்கியைத் தளர்த்திக் கட்டிக் கொண்டே ஹாலுக்கு வந்தான். முகத்தில் இறுக்கம்!

“ஏம்ப்பா ஒரு மாதிரி இருக்கீங்க?”

“அட நீ ஒண்ணுடா… உங்கப்பா இப்படி இருந்தாலே கம்பெனில ஏதோ பிரச்சினைன்னு தான் அர்த்தம்.”

“அப்படியாப்பா…?”

“அங்க என்ன கேள்வி… என்கிட்ட கேள். நான் சொல்றேன். உங்கப்பா உனக்கு ஒண்ணு எனக்கு ஒண்ணுன்னா கூட கவலைப் படமாட்டார். அவர் கவலைப்பட்டாலே கம்பெனில ஏதோ பிரச்சினைன்னு தான் அர்த்தம்…”

“என்னப்பா… அம்மா சொல்றது நிஜமா?”

“ஆமாண்டா…”

“அப்படி என்னப்பா பிரச்சினை? நீங்க வேலைல எதாவது தப்பு பண்ணீட்டங்களா?”

“பைத்தியக்காரா… என் கம்பெனில இப்ப தப்பு பண்ணினா தான் பிடிக்க முடியும்.”

“என்னப்பா சொல்றீங்க?” கைலாசம் ஆச்சரியப்பட, சாருலதா திரும்ப இடையில் புகத் தொடங்கினாள்.

“கைலாசம்… நீ சாப்பிட்ற வழியப் பார். எப்பவும் ஊருக்கெல்லாம் ஒரு வழின்னா உங்கப்பாவுக்கு ஒரு வழி.”

“அட என்னம்மா நீ… அப்பாகிட்ட சொல்லி அப்பா ஆபீஸ்ல ஒரு ஆறு மாசமோ, ஒரு வருஷமோ மேனேஜ்மென்ட் ட்ரெய்னியா நான் ஆகணும்னு இருக்கேன். நீ இப்ப போய் இவர் வழி தனி வழிங்கறே…”

“ஆமாண்டா… அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு. கைவிரலே ஏத்த இறக்கமா இருக்கும் போது மனுசங்க அவ்வளவு பேரும் நாம எதிர்பார்க்கற மாதிரியே இருக்கணும்னா எப்படி?”

“நீ ரொம்பவே குழப்பறேம்மா…”

“நான் ஒண்ணும் குழப்பலை. உங்கப்பாவுக்கு எப்பவும் ‘தான் உண்டு-தன் வேலை உண்டு’ன்னு இருக்கத் தெரியாது. இவர் வேலை பாக்கற கம்பெனிக்கு இவர்தான் முதலாளி. கைலாசம் கூட இவரளவு கவலைப்பட மாட்டாருன்னுதான் சொல்வேன். யார் எக்கேடு கெட்டுப் போனா நமக்கென்னடா? நாம உண்டு நம்ம வேலை உண்டுன்னு

இருந்தா ஒரு பிரச்சினையும் இல்லை.”

-சாருலதா வார்த்தைகளை இறைத்தாள். தமிழிற்கு மூக்கு சிவக்கத் தொடங்கி விட்டது. ஓர் இடுங்கிய பார்வையை மனைவியை நோக்கிப் பார்த்தான்.

“சும்மா பார்க்காதீங்க… நீங்க ஒண்ணும் மகாத்மா இல்லை- எல்லாரையும் திருத்தறதுக்கு…”

“அப்புறம்?”

“என்ன அப்புறம் விழுப்புரம்…ஏங்க இப்படி அநாவசியமா கவலைப்பட்டே உடம்பைக்கெடுத்துக்கறீங்க. இப்ப உங்க கம்பெனி என்ன கவுந்தா போச்சு?”

“அப்ப… கவுந்து ஒண்ணும் இல்லாம போன பிறகுதான் ஒருத்தர் கவலைப்படணும்னு சொல்றியா சாரு”

“அப்படி எல்லாம் ஆகாதுங்க… கோடிக்கணக்குல பணம் போட்டுக் கம்பெனி நடத்தறவங்களுக்குத் தெரியாதாஎதை எப்படி நடத்தணும்னு…?”

“தெரியலை சாரு… சுத்தமா தெரியல…அதான் இப்ப என் கவலையே…”

“எதை வெச்சு சொல்றீங்க தெரியலன்னு…?”

“கம்பெனிக்குள்ற தண்ணி அடிக்கறான் ஒரு ஆபீசர். பேப்பர் படிச்சுகிட்டு இருந்துட்டு ஃபைல் பார்த்ததா புளுகறான் இன்னொருத்தன். இல்லாத பிரச்சனையை இருக்கறதா சொல்லி அதுக்கு லஞ்சம் கேக்கறான் ஒருத்தன்.அதையும் வாங்கிக் கொடுக்கறான் இன்னொருத்தன். எட்டு மணி நேரமும் வேலை. அதுல முழுசா மூணு மணி நேரம் யாரும் வேலை பாக்கறதில்லை. மீதி நேரம் முழுக்க அரட்டை அது இதுன்னே கழியுது. கேன்டீன்ல தொழிலாளர்களுக்கு ஒரு மெனு… ஒரு மேலதிகாரிக்கு மட்டும் ஸ்பெஷல் மெனு! எதாவது ஒரு குறைபாடுன்னா காது கொடுத்துக் கேக்கறது கிடையாது. தொழிலாளர்களை சந்திக்கறத ஒரு பெரிய கௌரவக் குறைவா நினைக்கற ஒரு சர்வாதிகார மனசு கொண்ட நபருக்கு ‘பப்ளிக் ரிலேன்ஸ் ஆபீசர்’ங்கற பதவி.”

-தமிழச்செல்வன் குமுறினான். அப்படி அவன் குமுறி- கைலாசமே பார்த்ததில்லை. ஆனால் அதெல்லாம் சாருலதாவை எதுவுமே

செய்யவில்லை.

“ஹ_ம்… இப்படித்தானே இந்தியா பூரா எல்லாம் கம்பெனியும் இருக்கு. என்னமோ உங்க கம்பெனி மட்டும் இப்படி இருக்காக்கும்?”

“உளறாதே…என் M.D.பத்தி உனக்கு என்ன தெரியும்? அவ்வளவு பெரிய கோடீஸ்வரர் ஒரு ‘மேன் ஆஃப் கேரக்டர்’ங்கறது உனக்கு தெரியுமா? இப்பவும் கம்பெனிக்கு வந்தா எங்க கூட லைன்ல நின்னு நாங்க சாப்பிட்றதத் தான் சாப்பிடுவார். ஒரு ஸ்வீப்பர் கிட்டக்கூட சௌஜன்யமா தோள்ல கைப்போட்டுப் பேசுவார். எதுலையும் நம்பர் ஒண்ணா இருக்கணும்கறது அவர் பாலிசி. அதுக்காக ராத்திரிஇ பகல்னு பாடுபட்றவர் அவர். அவர் பட்டபாடுதான் - முந்நூறு ரூபா சம்பளம் வாங்கின நான் இன்னிக்கு பதினைந்தாயிரம் வாங்கக் காரணம். ஒரு கம்பெனியை ஒன்பது கம்பெனி ஆக்கினவர் அவர். அப்படி கம்பெனி வளரலேன்னா இந்த சம்பளமும் சௌகர்யங்களும் செய்து தர முடியாதுங்கறது அவர் அபிப்பிராயம். அதுதான் உண்மையும் கூட.

நான் இந்தக் கம்பெனில வேலைக்கு சேர்ந்த போதுதான் என் ஃப்ரண்ட் பாலு ஒரு ரைஸ் மில்லுல வேலைக்கு சேர்ந்தான். இன்னிக்கு அவன் அஞ்சாயிரம் சம்பளத்தைக் கூடத் தொடலை. ஆனா நான் பதினைஞ்சாயிரம் வாங்க என் முதலாளியோட தீர்க்க தரிசனம் தான் காரணம்.”

“எல்லாம் சரிங்க… இவ்வளவு தூரம் ஒரு கம்பெனிக்கு ஒன்பது கம்பெனியை உருவாக்கினவருக்கு நீங்க சொல்ற தப்புகள் பத்திதானா தெரியாது?”

“அதுதான் இப்ப என் கேள்வி… அதுதான் இப்ப என்ன குழப்பம்…”

“சரி… தெரியலைன்னே வெச்சுப்போம். அவரைப் பார்க்கும் போது நீங்க சொல்லிவிட்டுப் போங்க…”

“அப்படி எல்லாம் சொல்ல முடியாது சாரு… ஒரு தேசத்து ஜனாதிபதி உலகளாவிய பிரச்சினைல கவனமா இருக்கும் போது ஒருத்தர் ஜனாதிபதிகிட்ட போய் தன் வீட்டுக்கு குழாய்ல தண்ணீர் வர மாட்டேங்குன்னு சொல்ற மாதிரி தான் நான் இந்தப் பிரச்சினைகளைப் பத்தி பேசறதும்…”

“உங்க பதில் எனக்கு சிரிப்பைத் தாங்க தருது. அவர் உயரத்துக்கு இதெல்லாம் பிரச்சினைகளே இல்லைன்னு தான் அர்த்தமாகுது.

அப்புறம் ஏன் கவலைப்படறீங்க?"

"சாரு... ஒரு நல்ல பழமொழி ஒண்ணு என்ன சொல்லுது தெரியுமா?"

"என்ன?"

"சின்னப் பிரச்சினைகளில் தீவிர கவனம் செலுத்தினால் பெரிய பிரச்சினைகள் தானே சரியாகி விடும்னு அந்த பழமொழி சொல்லுது."

"நீங்க முடிவா என்னதான் சொல்ல வர்றீங்க..."

"இதை முதலாளி கிட்ட கொண்டு போகக் கூடாது. அதே சமயம் இங்க இருக்கறவங்களும் பயந்தாகணும். அவர் கவனத்துக்குப் போகாமலே இதைச் சரி செய்ய என்ன வழின்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன்."

"சரிப்பா... நல்லா யோசிங்க. அப்படியே எனக்கும் ஒரு வழியப் பாருங்க."

"பாக்கறேன் M.D. ஆனா, அப்பா, பிள்ளை இரண்டு பேரும் ஒரே இடத்துல வேலை பாக்கறது அவ்வளவு சரியான ஒரு விஷயம் கிடையாது. ஆகையால நீ எதுக்கும் வேற கம்பெனில சேர்ற வழியப்பார்.

"சரி... இனியாவது கம்பெனிப் பிரச்சினையை மூட்டை கட்டி வெச்சுட்டு சாப்பிட்ற வழியப் பாக்கறீங்களா?"

-சாருலதா கை கூப்பாத குறை. அந்த அளவு பேசியதில் தமிழ்ச் செல்வனிடம் மனபாரம் குறைந்திருந்தது. சாருவும் ஹாட் பேக்கில் இருந்து சூடான இட்லிகளை எடுத்து வைத்தாள்.

அந்த நேரத்துக்கு அது அமிர்தமாகவும் இருந்தது!

# 6

தமிழ் மாத வரிசையில் புரட்டாசி மாதம் ஒரு விசித்திர மாதமாகும். இந்த மாதத்தில் காற்றும் சரி, வெயிலும் சரி, மழையும் சரி மூன்றுமே சம விகிதத்தில் இருக்கும். 'புரட்டாசி வெயிலில் பொன் உருகும்' என்றே ஒரு பழமொழி உண்டு. இந்த மாதத்தில் பெருமாளுக்கு உகந்த சனிக்கிழமைகள் தனிச்சிறப்பைப் பெறுகின்றன. திருமலையில் ஆண்டுதோறும் 'பிரம்மோற்சவம்' எனும் - ஆலயத்துக்கு சக்தி சேர்க்கும் - நிகழ்வு இம்மாதத்தில்தான் நடைபெறுகிறது. பொதுவில்

ஆலயங்களுக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் சக்தி சேர்க்கும் கும்பாபிஷேகம், சம்ப்ரோஷணம் போன்ற நிகழ்வுகள் நடக்கும். ஆனால் திருமலையில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் சனிக்கிழமை விரதம் இருந்து கலந்து கொள்வது பலவித வினைகளுக்குப் பரிகாரம் ஆகிறது.

கலாசார சிறப்பு மிகுந்த நவராத்திரி பண்டிகை இம்மாத இறுதியில்தான் வருகிறது. ஒன்பது தினங்கள் சக்தி வழிபாடு நிகழ்த்தி பத்தாம் நாள் விஜயதசமியாகக் கொண்டாடப்படுவதும் இம்மாதத்தில்தான். இம்மாதத்தில் வீடு குடிபுகுவது கூடாது என்பார்கள்.

மிகச் சரியான கார்காலம் அதாவது மழைக் காலமான புரட்டாசி இறைவனின் ஆசிகளை நாம் தேடிப்பெற வழிகாட்டும் மாதமாக உள்ளது.

யூனிஃபார்மை மாட்டிக் கொண்டு நேம் பேட்ஜையும் வைத்துக் கொண்டு கிளம்பி விட்டவனை ஓடிவந்து பார்த்தாள் சாருலதா.

“என்ன சாரு…”

“இல்ல… எல்லாம் சரியா இருக்கான்னு பார்த்தேன்…”

“நான் எப்ப தப்பா இருந்துருக்கேன்?”

“நல்ல கேள்விதான்… ஆனா தப்பா இருக்கறவங்க அதிகமா இருக்கற இடத்துல நல்லபடியா ஒருத்தன் அதுவே தப்புதாங்க…’

“ஐயோ… இப்பவே நீ ஆரம்பிச்சிட்டியா?”

“சரி சரி ஜாக்ரதையா போய்ட்டு வாங்க. யாரோ எக்கேடோ கெட்டுப் போகட்டும். நீங்க உங்க வேலையைப் பாத்துட்டு வந்துட்டே இருங்க. ராத்திரி நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்…”

-சாருலதா மந்திரித்து அனுப்பி வைத்தாள். ஒரு மெல்லிய புன்னகையோடு பைக்கில் ஏறி அதை உதைத்தான் தமிழ். அதுவும் சீறிக் கொண்டு சாலையில் பாய்ந்தது. அவன் மனதுக்குள்ளேயும் ‘யாரோ எக்கேடா கெட்டுப் போகட்டும்... நாம் நம் வேலையைப் பார்ப்போம்…’ என்கிற மந்திரம்தான்.

ஆனால் எப்பொழுதும் விதி என்பதே வினோதமானதாயிற்றே! அது தன் பாட்டையில் தானே எல்லோரையும் இழுத்துச் செல்லும்? தமிழ்ச்

செல்வன் மட்டும் விதிவிலக்கா என்ன…

கம்பெனிக்குள் அவன் நுழையும் போதே விதி அவனை பிராண்டத் தொடங்கி விட்டது. செக்யூரிட்டி வாட்ச்மேன் தமிழ்ச்செல்வனை பி.ஆர்.ஓ, வேலாயுதராஜன் பார்க்க விரும்புவதாகவும், அவரை டிபார்ட்மெண்டில் பார்த்து விட்டுப் போகும்படியும் கூறினான். தலையாட்டிவிட்டு உள்ளே போய் பைக்கில் ஸ்டாண்ட் போட்டு வண்டியை நிறுத்திவிட்டு பி.ஆர்.ஓ. செக்ஷனுக்குப் போன போது உள்ளே வேலாயுதராஜன் அறைக்குள் இருந்து மது வாடை எட்டிப் பார்த்தது. ‘கடவுளே...” என்று முணுமுணுத்தது தமிழின் உதடு.

அறைக் கதவைத் தட்டினான்.

“யெஸ் கமிங்…” உள்ளே இருந்து அழைப்பு. நுழைந்தான்.

வேலாயுத ராஜனும் தமிழை ஏற இறங்கப் பார்த்தான். தனக்கு எதிரில் இருந்த நாற்காலியில் உட்காரச் சொல்லக் கூடத் தோன்றவில்லை. பொதுவில் டாப் மேனேஜ்மென்ட்டில் மேலாளர் பொறுப்பில் உள்ளவர்கள் தவிர யாரும் அதிகாரிகள் எதிரில் அமர்ந்து பேசக் கூடாது என்பது அங்கே ஓர் எழுதப்படாத சட்டமாகவே இருந்து வருகிறது. உட்காரச் சொன்னால் ஒரு சமதை வந்து விடும் என்று எப்பொழுதோ, எவனோ சொன்னதை அதிகார வர்க்கம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது. தமிழ்கூட நின்று பார்த்து விட்டு தானாகவே நாற்காலியில் அமர்ந்தான். அதுவே வேலாயுத ராஜனைக் கீறியது.

“நீ தான் தமிழ்ச்செல்வனா?”

“ஆமாம் சார்… கொஞ்சம் மரியாதையா பேசினா நல்லா இருக்கும். நான் ஒரு சீனியர் எம்ப்ளாயி… உங்களை விடவும் வயசுலயும் பெரியவன்!”

“பயங்கர ரோஷக்காரனா இருப்பே போல இருக்கே.”

“இப்ப எதுக்கு சார் இந்தக் கேள்விங்க… எதுக்கு கூப்பிட்டீங்க? விஷயத்துக்கு வாங்க. நான் டிபார்ட் மென்ட்டுக்கு ஒரு நாள் கூட லேட்டா போனது கிடையாது.”

“டயத்துக்கு போறதாலயே பெரிய ஸ்கில் ஒர்க்கர்ன்னு நினைக்க வேண்டாம்.”

“என்ன சார் சொல்றீங்க…?”

“சும்மா படம் காட்டாதேன்னு சொன்னேன்…”

“நீங்க கேட்டதுக்கு நான் சொன்னேன். நானா வந்து சொல்லலையே…”

“உன்னைப்பத்தி நான் கேள்விப்பட்டதெல்லாம் சரிதான்னு தோணுது…”

“என்ன கேள்விப்பட்டீங்க?”

“அதை நான் விலாவாரியா சொல்ல விரும்பலை. ஒண்ணு மட்டும் நல்லா தெரிஞ்சுக்கோ. வந்தோமா, வேலையைப் பார்த்தோமா, போனோமான்னு இருக்கணும். யார், எங்க, என்ன பண்றாங்கன்னு பாக்கறது-அப்புறம் பத்த வைக்கறதுங்கற ஆள்காட்டி வேலையெல்லாம் கூடாது. உன் மகனுக்கு சேர்மன் பேரை வெச்சதாலெல்லாம் நீ சேர்மனுக்கு ரொம்ப நெருக்கம்னு நாங்க நினைக்க மாட்டோம். நான் பல கம்பெனிகள் பார்த்துட்டு இங்க வந்துருக்கேன். உக்காந்த இடத்துல இருந்து, உள்ள என்ன நடக்குதுன்னு சொல்றவன் இந்த பி.ஆர்.ஓ. ஞாபகம் இருக்கட்டும்… நீ போகலாம்…”

- வேலாயுதராஜன் தாளித்து முடிக்க, தமிழ்ச்செல்வன் கண்ணிரண்டும் கலங்கி விட்டது. எனக்கென்ன என்று சாலையில் போய்க் கொண்டிருந்த ஒரு குருடனைக் கூப்பிட்டு ‘என் பொண்டாட்டி குளிக்கும் போது எட்டிப் பாத்தியாமே…?’ என்று கேட்டால் எது எவ்வளவு அபத்தமோ அவ்வளவு அபத்தம் போல் தோன்றியது.

கலங்கிய கண்களுடன் அங்கிருந்து புறப்பட்ட தமிழ் தன் டிபார்ட்மென்ட்டுக்குள் நுழைந்த போது வேலை நேரம் தொடங்கி விட்டிருந்தது. ஆனால், யாரும் பெரிதாக வேலையைச் செய்ய ஆரம்பித்திருக்கவில்லை. அரட்டை தான் நடந்து கொண்டிருந்தது. ‘சிவாஜி’ படம் தமிழ் வருஷப் பிறப்பிற்கு வருமா… வராதா? என்கிற தேசியப் பிரச்சினை குறித்துத்தான் அவர்கள் கவலையும்…

வாடிய முகத்துடன் கம்ப்யூட்டர் மானிட்டர் முன் அமர்ந்து திரையைப் பார்த்த தமிழுக்கு திரையே தெரியவில்லை. அந்த அளவுக்குக் கண்ணீர் திரை.

“தமிழ்…” – குரலோடு வந்தான் மோகன்குமார்.

தமிழ் நிமிரவில்லை.

“என்னப்பா… ஏன் கண் கலங்கியிருக்கே?”

“ஒண்ணுமில்ல மோகன்.”

“புளுகாதே… பி.ஆர்.ஓ. ரூம்ல இருந்து நீ வந்ததைப் பார்த்தேன். அந்த தண்ணி வண்டி காலைலயே மப்புல இருந்தான். எதாவது சொன்னானா?”

“சொல்லலை. வார்த்தைகளால் என்னை நிக்க வெச்சு கொளுத்தினான்.”

“உன்னை எதுக்கு வார்த்தையால அந்த ஆள் கொளுத்தனும்?”

“தெரியல… ஆனா இதை என்னால ஜீரணிக்க முடியல மோகன்குமார்.”

“நீயும் நல்லா திருப்பிக் கேக்கறதுக்கென்ன…?”

“என்னத்த கேக்க… அந்த ஆள் குடிச்சிருக்கான்… கைல பவர் வேற…”

“இப்ப புரியுதா நம்மளோட மட்டமான நிலை…”

-மோகன்குமார் இதுதான் சாக்கு என்று மடக்கிக் கட்டப் பார்த்தேன்.

“தமிழ்… எப்பவும் பிரைவேட் கம்பெனிங்கறது அதிகாரிங்க கம்பெனியாதான் இருக்கு. அவங்க வெச்சதுதான் சட்டம். அவங்களுக்குப் பிரியமாவே இருந்துடணும். மாறி நின்னா ஆபத்துதான். போகட்டும். நீ யூனியன்ல புகார் கொடுக்கறியா?”

“இல்ல மோகன், விடு… இன்னொரு தடவை அந்தாள் என் மனசைப் புண்படுத்தட்டும். அப்ப பாத்துக்கலாம்.”

-தமிழ் தன்னைத் தேற்றிக் கொண்டு வேலைக்குள் புகப் பார்த்தான். தொடக்கத்தில் சிரமமாகத்தான் இருந்தது. ஆனால் போகப் போக சரியாகி விட்டது. அவன் பெரிதாக எந்த சலசலப்புக்கும் இடம் கொடுக்காமல் வேலை பார்ப்பதை வெகுதூரத்தில் இருந்து ஒருவன் பார்த்துக் கொண்டே இருந்தான்.

மாலை, வேலை நேரம் முடிந்து தமிழ்ச் செல்வன் வெளியேறவும், நேராக பி.ஆர்.ஓ. வேலாயுதராஜன் அறைக்குத்தான் போய் நின்றான்.”

“சார்.”

“என்னய்யா…”

“வாயே திறக்கல சார். அப்படியே அமுக்கி ஜீரணம் பண்ணிட்டான் சார்.”

“நெஜமாவா?”

“ஆமாம் சார்… மோகன்குமார் மட்டும் ஏதோ கேட்டுப் பார்த்தான். ஆனா பிடியே கொடுக்கலை. வழக்கத்தைவிட கூடுதலாகவே வேலை பார்த்து அவுட்புட்டும் காட்டிட்டான் சார்…’

“என்னய்யா… பெரிய ‘மலை விழுங்கி மகாதேவ’னா இருப்பான் போல இருக்கே…’

“ஆமாம் சார்… அவனை வேலையை விட்டுத் துரத்தறது கஷ்டம் சார்…”

“இதையே எத்தனை தடவை சொல்வே. இவனைத் துரத்திட்டு இவன் இடத்துக்கு உன் ரிலேஷனைக் கொண்டு கிட்டு வந்து காட்டறேன் பார்…”

“என்னமோ சார்… உங்களத்தான் நான் நம்பியிருக்கேன். இந்த வேலை கிடைக்காட்டி என் ரிலேஷனுக்கு நான் பதில் சொல்ல முடியாது. கிடைச்சுட்டா உங்க காட்டுலதான் மழை. என் ரிலேஷனோட அப்பா பிராந்தி கடைலதான் வேலை பாக்கறார். நல்ல சரக்கா டெய்லி ஒரு பாட்டில் நிச்சயமா உங்களுக்குக் கிடைக்கும்.”

“சரி நீ கிளம்பு. அவனுக்கு அடுத்த ஆப்பை எப்படி வைக்கறதுன்னு பாக்கறேன்.”

“ரொம்ப சிம்பிளா கதையை முடிச்சிடலாம் சார். ஆனா வேலை போறதோட கம்பி எண்ண வேண்டி வந்தாலும் வரும்.”

“அவன் கம்பி எண்ணுறான்… இல்ல குச்சியை எண்ணுறான். அதப்பத்தி நமக்கென்ன கவலை. என்ன வழின்னு மட்டும் சொல்லு…”

அந்த ஜால்ரா பார்ட்டியும் வேலாயுதராஜன் காதில் ஏதோ சொல்ல, வேலாயுத ராஜன் கண்ணிரண்டும் பளபளவென்று உருமாறியது.

# 7

ஐப்பசி மாதம் ஓர் அடை மழை காலமாகும். அற்புதமான க்ளைமேட் நிலவுகின்ற ஒரு காலம் என்றும் கூறலாம். இந்த மாதத்தில்தான் தன்னிகர் இல்லாத தீவாவளி பண்டிகை வருகிறது. அதைத் தொடர்ந்து சஷ்டி விரதமும் வருகிறது. இந்த மாதத்து அமாவாசைக்கு அதாவது சூரியர், சந்திரர், இருவரும் சேரும் நாளன்று காலை வரும் பிரம்மமுகூர்த்த வேளைக்கு ஓர் உன்னத சக்தி இருக்கிறது. இவ்வேளையில் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளிப்பவர்கள் கங்கையில் மூழ்கி எழுந்த பயனை அடைகிறார்கள். அதுமட்டுமல்ல…

இன்றைய தினம் தீபங்கள் ஏற்றி, புத்தாடை அணிந்து, இனிப்பு உண்டு எல்லாருமே மகிழ்வான மனநிலையில் இருப்பார்கள். ஓர் ஆண்டின் மிக மகிழ்வான ஒரு தினமும், மிக அதிகம் பேர் மகிழ்வாக இருக்கும் ஒரு தினமும் தீபாவளித் திருநாள் மட்டும்தான்.

இன்றைய தினத்தின் இன்னொரு சிறப்பு இன்று செய்யப்படும் லட்சுமி பூஜை... அதாவது தீபாவளி அன்று மாலை 6 மணிக்கு செய்யப்படும் லட்சுமி பூஜையும், குபேர பூஜையும் ஒருவருக்கு வற்றாத செல்வத்தை வாரி வாரித் தந்திடக் கூடியது.

இன்று லட்சுமி பூஜையை பட்டு வேட்டியும் துண்டும் உடுத்தி செய்திட்ட ஒருவர் தொடர்ந்து 9 லட்சுமி பூஜை செய்வதற்குள் ஓர் உயர்ந்த நிலைக்கு சென்றவராக இருப்பார்கள். இதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

வீடு திரும்பிய தமிழ்ச்செல்வனை காபியோடு ஏறிட்டாள் சாருலதா. அவனது முகம் வாடியிருப்பதை வைத்தே ஏதோ விவகாரம் என்பதை யூகித்து விட்டாள். தமிழ்ச்செல்வனும் சாருலதாவிடம் எதையும் மறைக்கவில்லை. நடந்த அவ்வளவையும் சொல்லி முடித்தவன்,

“உனக்காகவே பல்லைக் கடிச்சிட்டு இருக்கேன் சாரு. உண்மைல எந்த அளவுக்கு இரத்தம் கொதிக்குது தெரியுமா?” –என்று கேட்க, அதை அவன் மகன் கைலாசமும் கேட்டுக் கொண்டிருந்தான்.

வீட்டில் லுங்கி, டீ-ஷர்ட் என்று ஹோம்லியாக இருந்தவன், தமிழ்ச்செல்வன் அருகில் வந்து சிந்தனையோடு அமர்ந்தான்.

“அப்பா… இப்படிக்கூடவா ஒரு தொழிற்சாலை இருக்கும்?” என்று சன்னமான குரலில் கேட்டான்.

“இருக்கேப்பா அதான் பாக்கறயே…”

“இப்படி எல்லாம் இருந்தா எப்படிப்பா நிம்மதியா வேலை பாக்க முடியும்.”

“நிம்மதியா வேலை பாக்கக் கூடாது… வெளியேறிடணும்ங்கறதுக்காகத்தானே இப்படி எல்லாம் நடக்குது.”

“வெளியேறிவிட்டா அப்புறம் யாருப்பா வேலை பார்ப்பா? உற்பத்தி எப்படி நடக்கும்? உங்க முதலாளி எப்படி லாபம் சம்பாதிருப்பாரு?”

“அதெல்லாம் தானா நடக்கும்ப்பா… நான் போனா இன்னொருத்தன்.

வேலை இல்லாமத் தான் கோடிக் கணக்குல இளைஞர்கள் இருக்காங்களே…”

தமிழ்ச் செல்வன் கேட்ட போது வக்கீல் மாமா என்னும் வரதராஜ மாமா வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தார். வரதராஜ மாமா ஒரு லீடிங் லாயர். சட்டத்தின் அவ்வளவு சந்து பொந்தையும் அறிந்தவர். பெரிய அளவில் சமுதாய சிந்தனையும் உடையவர்.

அவரைப் பார்க்கவும் தமிழ்ச் செல்வனுக்கு ஒரு புதிய தெம்பு வந்தது. ‘வாங்க மாமா’ என்று உற்சாகமாக வரவேற்றான். மாமாவும் தமிழ்ச் செல்வனின் முகவாட்டத்தை வைத்தே பிரச்சினையை யூகித்து விட்டார்.

“என்ன தமிழ்ச் செல்வம்… எப்படி இருக்கு உங்க கம்பெனி?”

“என்ன மாமா வந்ததும் வராததுமா கம்பெனியைப் பத்தி கேக்கறீங்க?”

“உள்ளே புதுசா ஒருத்தன் பி.ஆர். ஓ.வா ஜாய்ன் பண்ணியிருக்கான் போல இருக்குதே…”

“ஆமாம்… மாமா… அந்த ஆளாலதான் இப்ப நிம்மதியே இல்லாம போச்சு.”

“அவன் ஒரு மன நோயாளிப்பா. மனசுக்குள்ள தன்னை இந்திரன் சந்திரன்னு நினைச்சுக்கிட்டிருக்கறவன். இதுக்கு முந்தி வேலை பார்த்த கம்பெனில இருந்து கழுத்தப்பிடிச்சு தள்ளாத குறை…”

“அப்படி ஒரு ஆளுக்கு எப்படி மாமா எங்க கம்பெனில இடம் கிடைச்சது?”

“இதை நீதான் உன் மேலிடத்துல கேக்கணும்…”

“மேலிடத்துல நான் கேட்டா பதில் சொல்வாங்களா… என்ன மாமா நீங்க?”

“அதுவும் சரிதான்… சுருக்கமாக சொல்றேனே. யாருக்கெல்லாம் கெட்ட நேரம் இருக்கோ, அங்கல்லாம் இவன் இருப்பான். வாயத்திறந்தா பொய். இந்த நாட்டுல யாரும் அரிச்சந்திரர்கள் இல்லதான். ஆனா இந்த நபர் காரணமே இல்லாம பொய் சொல்றவன். இப்ப நீ போய் பாக்கறேன்னு வையேன். உன் எதிர்க்க யார் கூடவோ போன்ல பேசிட்டு, எம்.எல்.ஏ. கூடப் பேசினேன், எம்.பி. கூடப் பேசினேன்’னு சொல்வான்.

அளவுக்கதிகமா உள் மனசுல பயமும், கூடவே காழ்ப்புணர்ச்சி, சுயநலம்னு தப்பான குணங்களும் யார்கிட்டல்லாம் இருக்கோ அவங்கல்லாம் இவன மாதிரிதான் நடந்துப்பாங்க…”

“மாமா…! உங்க ‘கேரக்டர் டெஃபனிஷன்’ ஒரு பக்கம் இருக்கட்டும், அப்பா இந்த நபரால ரொம்பவே மன வேதனைப்பட்றாரு. எப்படி இந்தப் பிரச்சினைல இருந்து வெளிய வர்றது…? வழி சொல்லுங்க…” – கைலாசம் கேட்டான்.

“இதெல்லாம் தலை எழுத்து கைலாசம். அப்பா, அம்மா, குருங்கற மூணு கேட்டகரிக்குப் பிறகு நல்ல முதலாளி அமையக் குடுத்து வெச்சிருக்கணும். அந்த முதலாளி மாதிரிதான். சகிச்சுக்கிட்டுத்தான் போகணும். வேற வழியில்ல.”

“என்ன மாமா… ஒரு வக்கீலா இருந்துக்கிட்டு இப்படி ஒரு பதில் சொல்றீங்க?”

“சட்டபடி இவங்கள எதுவும் செய்ய முடியாது. எவிடென்ஸ் வெச்சுக்கிட்டெல்லாம் இவங்க தப்பு பண்ண மாட்டாங்க. இவங்க குணக்கோளாறைக் கோர்ட்ல நிரூபிச்சு தண்டனை வாங்கித்தர முடியாது. ஆனா இவங்க மனசு வெச்சா யாரை வேணா தண்டிக்கலாம். ஏன்னா இவங்க கைல அதிகாரம் இருக்கு.”

“தப்பு பண்ணாம எப்படி மாமா தண்டனை கொடுக்க முடியும்?”

“நீ சின்னப் பையன்… உனக்கு அனுபவம் போதாது. இவங்கல்லாம் தப்பு பண்ண வெச்சு தண்டனை வாங்கிக் கொடுப்பாங்க.”

“இதே ஆயுதத்தை இவங்க மேல போட்டா…”

“எப்படி…எப்படி…?”

“இவங்கள தப்பு பண்ண வெச்சு நாம தண்டனை வாங்கித்தர முடியாதா,”

“எதுக்கு தனியா தப்பு பண்ண வைக்கணும். இப்ப இருக்கறதே தப்பாதானே இருக்காங்க. முடியலியே…”

“அட ஆமாம்ல…”

“அதான் ஆரம்பத்துலையே சொன்னேன் - உனக்கு அனுபவம் போதாதுன்னு…”

“அப்ப இதுக்கெல்லாம் தீர்வு…?”

“நல்ல மனிதர்கள் அதிகாரிகளா வரணும். மனிதாபிமானத்தோட அவங்க நடந்துக்கணும். இதை தவிர வேற வழியே இல்லை.”

-மாமா கருத்து தமிழ்ச்செல்வனுக்குள் ஒரு மெல்லிய எரிச்சலை மூட்டியது.

“தப்பா சொல்றீங்க மாமா... எங்க ஆபிஸ்ல எவ்வளவோ நல்ல ஆபீசர்ஸ் இருக்காங்க. ஒரு சிலர் தப்பா இருக்கறத வெச்சு எல்லோரையும் சொல்லாதீங்க...”

“பார்த்தியா கைலாசம்... உங்கப்பனுக்கு வர்ற கோபத்தை...? உங்கப்பன் ஒரு விசித்திரமான ஆள். பொதுவா ஒரு ஃபேக்டரில் இரண்டு விதமான மனிதர்கள்தான் இருப்பாங்க. ஒரு சாரர் அதிகார வர்க்கத்தை எதிர்க்கறவங்க. இன்னொரு சாரர் அதிகார வர்க்கத்தை ஏமாத்தி அதுக்கு ஜால்ரா போட்றவங்க. ஆனா உன் அப்பன் அந்த வர்க்கத்தை நேசிக்கிறவன். அதான் இப்படி கோபப்பட்றான்.”

“சரியா சொன்னீங்க... ஆனா இவரோட விசுவாசத்துக்கு ஒரு மதிப்பு இல்லையே மாமா... முதலாளி மேல விசுவாசமா ஒருத்தர் இருக்கறத தொழிலாளர்களும் தப்பா நினைக்கிறாங்க. அதிகாரிகளும் தப்பா பாக்கறாங்க...”

“அப்படித்தான் பார்ப்பாங்க. இருபது வருஷத்துக்கு முந்தி வரை முட்டாளா இருந்தா கூட பரவாயில்லை. விசுவாசமா இருந்தா போதும்கற ஒரு நிலை இருந்தது. ஆனா காலம் இப்ப அப்படி இல்லை. இது ஹைடெக் யுகம். விசுவாசத்தைவிட புத்திசாலித்தனத்துக்குத்தான் முதலிடம்.”

“கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்...”

“புரியும்படியாவா? சரி... திறமையான வேலைக் காரனா இரு. உண்மையான வேலைக்காரனாகவும் இரு. அதே சமயம் விழிப்போட புத்திசாலியா இரு.

இன்னிக்கெல்லாம் வேலை கிடைச்சு வேலைக்கு போய் உழைக்கறது ஒரு பெரிய விஷயம் இல்லை. அதுல ஒரு சத்திய நெருப்பு இருக்கணும். தப்பா யாராவது நடந்துக்க பார்த்தா சுட்டெரிக்கற சக்தியோட நாமதான் இருக்கணும். ‘பவர் இல்லையே... லோயர் லெவல்ல இருக்கே’ங்கற தாழ்வு மனப்பான்மை உதவி செய்யாது. ஒரு தொழிற்சாலை முதலாளியும் சரி, அங்க வேலை பாக்கற ஸ்வீப்பரும் சரி தனித்தனியே

அவங்க கடமையைச் செய்யறவங்க. வேலைதான் வித்தியாசம். வேற எதுலையும் கிடையாது. இந்தத் தெளிவு ரொம்ப முக்கியம்.”

மாமா சொல்லிக் கொண்டே போனார். தமிழ்ச் செல்வத்துக்கு அதில் நிறைய விஷயங்கள் புரியவில்லை. ஆனால் கைலாசத்துக்கு புரிந்தது.

“மாமா… இனி நான் பாத்துக்கறேன். அப்பாவோட விசுவாசத்துக்கும் கடமை உணர்ச்சிக்கும் அவர் ஒரு நியாயமான உயரத்துக்குப் போவார். இது நிச்சயம்” என்றான். ஆனால் அதை எப்படி சாதிக்கப் போகிறான் என்பதுதான் பெரிய கேள்விக்குறி!

## 8

ஜெகஜ்ஜோதியான ஒரு மாதம் தான் கார்த்திகை. முருகவேலனுக்கு மிக உகந்த மாதம். கார்த்திகைத் திருநாளன்று திருவண்ணாமலை உச்சியில் ஏற்றப்படும் தீபம் மிக விசேடமானது. இதைக் கண்ணாரக் கண்டு மனதாரத் துதிப்பவர்களுக்குத் தீராத வினை எல்லாம் தீரும்.

விரதங்களில் ஏகாதசி விரதம், சஷ்டி விரதம், கார்த்திகை விரதங்கள் விசேடமானவை. இதில் கார்த்திகை விரதம் மன இருளைப் போக்கிப் பேரருளைப் பெற்றுத் தர வல்லது. ‘கார்’ என்று சொன்னால் இருள் என்று ஒரு பொருள் உண்டு. அந்த இருள், திகைத்துப் போய் நிற்கும் ஒரு மாதம் என்கிற பொருளில் தான் ‘கார்த்திகை’ என்று பெயர் வந்ததாக சிலர் கூறுவர். இருள், ஒளி மிகுந்த மாதம் - அருள் மிகுந்த மாதம் என்று பல பொருளில் கூறலாம். ஒளியில் இருந்து பிறந்த முருகனே இம்மாத அதிதேவதை ஆவான். இம்மாத பௌர்ணமி நாளும் விசேஷ சிறப்பு உடையது.

அன்று ஆபீசுக்குள் தமிழ் நுழைந்த போது ஓர் ஆச்சர்யம் காத்திருந்தது. டிபார்ட்மெணட்டுக்குள் நுழைந்தஅவனுக்கு அவன் டேபிள் மேல் ப்ரமோஷன் ஆர்டர். அதில் அன்றுமுதல் அவன்தான் மேனேஜர் என்கிற குறிப்பு. சம்பளத்திலும் கிட்டதட்ட 12000 ரூபாய் உயர்வு. தமிழ்ச்செல்வனால் முதலில் அதை நம்ப முடியவில்லை. ஆனால் கம்பெனி லெட்டர் ஹெட்டில் டைப் செய்யப்பட்ட வாசகங்கள் அவனுக்கு ஆச்சரியமளித்தன. கூடவே ஒரு கடிதம் அவனது மதிப்பிற்குரிய சேர்மன் கைலாசம் தான் எழுதியிருந்தார்.

அன்புள்ள தமிழ்ச்செல்வன்!

வாழ்த்துக்கள். உன் போன்ற விஸ்வாசிகளை உற்சாகப்படுத்தவும்

தட்டிக் கொடுக்கவும் தீர்மானித்து அதன் எதிரொலியாகவே உனக்கு இந்தப் பதவி உயர்வு! நீ தொடர்ந்து உன் கடமையைச் செவ்வனே செய்து நிறுவன முன்னேற்றத்துக்குப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று எழுதி கையெழுத்தும் போட்டிருந்தார்.

அந்த கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்த தமிழ்ச்செல்வனுக்குள் ஒரே பூரிப்பு. நேற்று வரை நிலவிய அந்த இறுக்கம்- மன வருத்தம் எல்லாம் அந்த ஒரு கடிதத்தில் தவிடு பொடியானது போல இருந்தது. திரும்பத் திரும்பப் படித்தான். அதற்குள் நண்பர்களும் சுற்றிச் சூழத் தொடங்கினர். அவர்களும் ப்ரமோஷன் ஆர்டரைப் பார்த்து தமிழ்ச்செல்வனின் கைகளைக் குலுக்கினர்.

ஒருவன் மட்டும் புத்திசாலித்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

“தமிழ்… இந்த ஆர்டரைக் கொடுத்தது யார்…? நம்ம ஜெனரல் மேனேஜரா, பர்சனல் மேனேஜரா?”

“பர்சனல் மேனேஜர்தான் மூணுமாச லீவுல அமெரிக்கா போய்ட்டார்ல…? இப்ப பர்சனல் மேனேஜர், ஜெனரல் மேனேஜர் எல்லாமே நம்ம புது பி.ஆர்.ஓ. வேலாயுதராஜன்தான்…”

“அந்த ஆள் நேத்து உன்னைக் கூப்பிட்டு கன்னா பின்னான்னு பேசினதால்ல கேள்விப்பட்டோம்? இன்னிக்கு என்ன மேனேஜர் ப்ரமோஷன்?”

“அட எவண்டா இவன்… ப்ரோமாஷன் கொடுத்துருக்கறது சேர்மன். உன்னை நல்லாவே என்கரேஜ் பண்ணியிருக்காரு. நாங்கள்ளாமும் கூட சந்தோஷப் பட்றோம். இங்க கஷ்டப் பட்றதுல அர்த்தம் இல்லேன்னு நினைச்சுக் கிட்டிருந்தோம். உனக்குக் கிடைச்சிருக்கிற ப்ரமோஷன் எங்களைக் கொஞ்சம் யோசிக்க வைக்குது.”

-நண்பர்கள் கூட்டமாகக் கூடிக் கை குலுக்கினர்.

“மேனேஜர் ஆயிட்டே… பார்ட்டியெல்லாம் இல்லையா?”- என்று கேட்டான் ஒருவன்.

“தமிழ்ச்செல்வன் பார்ட்டி கொடுத்தா பாட்டிலை திறக்க முடியாது. அது ஒரு சரியான சைவப் பார்ட்டியாதான் இருக்கும்ப்பா…”

“போகட்டும். தமிழ்…! நல்ல நேரத்துல போய் சீட்டுல உட்கார். நாங்களும் கண்குளிரப் பார்த்துட்றோம்.”

“காலியா இருந்த சீட்டுக்கு யாரைப் போடு வாங்கன்னு எதிர்பார்த்துக்கிட்டேயிருந்தோம். சத்தியமா தொழிலாளில ஒருத்தரை ப்ரமோட் பண்ணப் போறதில்லைன்னு தெரியும். இங்க யூனிவர்ஸிடி ஃபர்ஸ்ட்டே வந்தாலும் நாமக்கெல்லாம் லேபர்தானே? நமக்கு அடக்கி ஆள்ற அதிகார புத்தி கிடையாது? சொல்லிக் கொடுத்தாலும் வராது. ஆகையால் சோடாபுட்டி கண்ணாடி போட்ட எவனோ ஒருத்தன்தான் வரப் போறான்னு பார்த்தா கம்பெனி இந்த தடவை நமக்கு ஷாக்ட்ரீட்மென்ட் கொடுத்துடுச்சி.”

-இப்படியாக பேச்சுக்கள் நீண்டு செல்ல, தமிழ்ச்செல்வனும் போய் காலியாகக் கிடந்த மேனேஜர் நாற்காலியில் உட்கார்ந்தான்.

“நியாயப்படி உன்னை இந்த நாற்காலியில் ஜி.எம்.மும் அந்த பி.ஆர்.ஓ.வும் தான் உக்காத்தி வைக்கணும். ஆனா அவங்களுக்கு மிளகாயைக் கடிச்ச மாதிரி இருக்கும். அதான் ஆர்டர் பேப்பரை இங்க டேபிள்ல வெச்சுட்டு போய்ட்டாங்க போல இருக்கு…”

-தமிழ்ச் செல்வன் உக்காந்த நிலையில் ஒரு நண்பன் வருத்தப்பட்டான். பின் எல்லோரும் வரிசையாக நின்று கை குலுக்கினர். சிலர் பெருமூச்சு விட்டனர்.

“நமக்கெல்லாம் முன்னேற்றம் இல்லைங்கற அவநம்பிக்கைல ஓ.பி. அடிச்சது பெரிய தப்புன்னு இப்பதாண்டா தெரியுது.” –என்று ஒருவன் வாய்விட்டே முனங்கினான்.

ஆனால் அவ்வளவும் ஒரு நாடகத்தின் ஒரு பகுதி என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. கச்சிதமாக அந்த டிபார்ட்மெண்ட் நோக்கி வேலாயுதராஜனும் வந்தபடி இருந்தனர். அவர்கள் தலை தெரியுவும் வேட்டைக்காரனைப் பார்த்த காக்காய் கூட்டம் போல எல்லோரும் சிதறிக் கொண்டு ஓடினர்.

தமிழ் மட்டும் மேனேஜர் சீட்டில்.

அவனுக்கும் என்ன செய்வது எதைச் செய்வது என்பதில் குழப்பம். அப்படியே நிமிர்ந்த போது கடுகடு வென்ற முகத்தோடு பி.ஆர்.ஓ.வும் மேனேஜரும் அவன் முன் நின்று கொண்டிருந்தனர். தமிழும் அவர்களைப் பார்த்து “குட்மார்னிங்” என்றான்.

“குட்மார்னிங்கெல்லாம் இருக்கட்டும். இங்க என்ன பண்றே?”

“சார்…”

“என்ன சார் மோர்… இது மேனேஜர் சீட்… நீ ஒரு யூனியன் கேட்டகரி ஒர்க்கர். இந்த சீட்ல நீ எப்படி உட்காரலாம்?”

“சார்… இது… இது… பாருங்க சார் ப்ரமோஷன் ஆர்டரையும், சேர்மனோட லெட்டரையும்…”

-அவன் உடனே ஆர்டரைக் காட்டவும் இருவரும் வாங்கிப் பார்த்தனர். அதை ஒரு பார்வையும் அவனை ஒரு பார்வையும் பார்த்து முடித்தவர்கள் நக்கலாக ஒரு சிரிப்பும் சிரித்தனர். பின் பலமாக சிரிக்க ஆரம்பித்தனர். பின் பலமாக சிரிக்க ஆரம்பித்தனர். அங்கங்கே ஓடி ஒளிந்த தமிழின் நண்பர் கூட்டமும் அவர்கள் சிரிப்பதை ஆச்சரியமும் அதிர்ச்சியுமாக ஆரம்பித்தது.

“ஏய்யா… இப்படி டேபிள்ள அநாமதேயமா ஒரு ஆர்டர் இருந்தா அது கம்பெனி ஆர்டரா…? இது ஒரு போலியான ஏமாத்தற ஆர்டங்கறது உனக்குத் தெரியல…?” –பி.ஆர்.ஓ. முதல் குண்டை வெடித்தான்.

“இன்னிக்கு ஏப்ரல் ஒண்ணாம் தேதி. யாரோ இவனை நல்லா ஏமாத்த இப்படி பண்ணியிருக்காங்க. கம்பெனி லெட்டர் பேட்ல ஒரு ஷீட்டை திருடி டைப் பண்ணி போலியா கையெழுத்தும் போட்டு…ஓ…இட் ஈஸ் எ ஜைண்ட் மிஸ்டேக்!”

மேனேஜர் பங்குக்கு ஒரு உதறு உதறினார். அப்போதுதான் அன்று ஏப்ரல் 1 என்கிற விஷயமே தமிழ்ச்செல்வனுக்கு உரைத்தது.

“நான் என்ன நினைக்கறேன்னா… இவனே கூட இப்படி செய்துட்டு நம்மளை ஆழம் பாக்கறான்னு நினைக்கறேன்.” –பி.ஆர்.ஓ.வின் அடுத்த குண்டு தமிழ்ச்செல்வனை நடு மார்பில் சுட்டது போல ஆக்கிவிட்டது.

“சார் சத்யமா இல்லை… இன்னிக்கு ஏப்ரல் 1ங்கறதும் எனக்கு ஞாபகம் இல்லை…” –என்று விசும்பிப் பார்த்தான்.

“நோ…நோ… நீ ஒண்ணும் சரியில்லை. உனக்கு ‘நாமதான் இந்த கம்பெனியிலயே நல்லா வேலை பாக்கறோம்’கற திமிர். அதான் நீயா இப்படி ஒரு ஆர்டரை அடிச்சு வெச்சுக்கிட்டு உனக்கு நீயே மேனேஜர் ப்ரமோஷனும் கொடுத்துருக்கே. இது டாப் மேனேஜ்மெண்ட்டுக்கு தெரிஞ்சா எங்கே போய் நிற்கு தெரியுமா?”

“சார்… நிஜமா சொல்றேன். எனக்கு எதுவும் தெரியாது. நான் உண்டு என் வேலை உண்டுன்னுதான் இருக்கேன்.”

“இப்படி எல்லாம் பேசினா ஆச்சா… நீ சொல்றது ஒண்ணு – செய்யறது ஒண்ணுய்யா. அதுக்கு பாரு இந்த போலி ஆர்டரே சாட்சி…”

“சார் திரும்பவும் சொல்றேன். எனக்கும் இந்த ஆர்டருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது நான் டிபார்ட்மெண்ட்ல நுழைஞ்சப்போ என் டேபிள்மேல இருந்துச்சு…”

“ஏன்யா… ப்ரமோஷன் ஆர்டங்கறது கூப்பிட்டு பாராட்டுதலோடு தர வேண்டிய ஒரு பெரிய விஷயமாச்சே… இப்படி டேபிள்லயா கிடக்கும்?”

“எனக்கும் அந்த சந்தேகமும் இருந்துச்சு சார். ஆனா…”

“என்ன ஆனா ஆவன்னா… நீ நல்லா கதை விட்றே எல்லோரையும் நீ முட்டாள் ஆக்கப் பார்த்திருக்கே…”

“சார்… நான் யாரையும் முட்டாள் ஆக்கல. என்னைத்தான் யாரோ முட்டாள் ஆக்கிட்டாங்க.”

“இதை வேற யார்கிட்டேயாவது போய் சொல். பொறுப்பா நடந்துக்க வேண்டிய நீ பொய்யா ஒரு ஆர்டரைத் தயாரிச்சது முதல் குற்றம். அடுத்து அதை எல்லாரையும் கூப்பிட்டு நம்ப வெச்சது அடுத்த குற்றம். மூணாவது: மேனேஜர் சீட்டுல உட்கார்ந்தது. நாலாவது: எங்களை எதிர்த்து-எங்ககிட்ட குத்தத்தை ஒத்துக்காம பேசிக்கிட்டே போறது. இதுக்கெல்லாம் சேர்த்து வெச்சு இந்த நிமிஷமே உன்னை சஸ்பென்ட் பண்றேன். நாளைக்கு என்கொய்ரி வெச்சு குற்றங்களை நிரூபிச்சு பிறகு உன்னை வீட்டுக்கு அனுப்பிட்டுத் தான் மறுவேலை…இப்ப நீ வீட்டுக்கு கிளம்பலாம்.”

-பி.ஆர்.ஓ. கோர்ட்டில் பேசியது போல பேசிவிட்டு அந்த போலி ஆர்டரையும் கையில் எடுத்துக் கொண்டான். தமிழ்ச் செல்வத்துக்குள் அதுவரை அடங்கிக் கிடந்த ஆத்திரம் அப்படியே ஒரு மண்ணெண்ணெய் துணியில் பற்றிய நெருப்பு போல எரிய ஆரம்பித்தது.

“சார் வேண்டாம் சார்… நான்லாம் இந்த கம்பெனியை ஒரு கோயிலா நினைக்கறவன். நம்ம சேர்மன் எங்க வரைல தெய்வம். என்னைப் பாராட்டலேன்னாலும் பரவால்ல சார். இப்படி எல்லாம் என் மேல பழி போடாதீங்க. என்னை யாரோ ஏப்ரல் முட்டாளாக்கிட்டாங்க.”

“நோ… நீ ஒரு வார்த்தை பேசக் கூடாது. இடத்தைக் காலி பண்ணு முதலை. இல்ல செக்யூரிட்டிய வெச்சு வெளிய அனுப்ப வேண்டி வரும்.”

-அந்த அதட்டலான பேச்சுக்குப் பிறகு தமிழ் அங்கே நிற்கப் பிரியப்படவில்லை. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு டிபார்ட்மெண்டை விட்டுக் கிளம்பினவனை மொத்த ஷாப்ஃப்ளோரே பார்த்தது. எல்லோருக்குள்ளும் ஆணி அடித்தது போல ஒரு வலி. அந்த இரண்டு பேரிடமும் யாராவது வைத்துக் கொண்டால் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பதிலடி தருவார்கள் என்பதை உணர்ந்த ஓர் அதிர்ச்சி.

அவர்களுக்குள் இப்பொழுது முனங்கல்கள். “டேய் மாப்ள… தமிழ்ச் செல்வனையே ஏப்ரல் ஃபூல் ஆக்கி இந்த ஆபிசர் புத்திசாலியாயிட்டானேடா. இந்தக் கம்பெனி உருப்படும்கறே?”

“இது உருப்பட்டா என்ன… உருப்படாட்டி என்னடா. நாம இனி வேற கம்பெனிய பார்த்துக்க வேண்டியதுதான்.”

“எவன்டாவன்… நம்பளை எல்லாம் யாருடா கூப்பிட்றா. என்னமோ எம்.டெக்., பி.டெக்னு படிச்சுட்டதா நினைப்பா உனக்கு…”

“அதானே… ப்ளஸ் டூ தாண்டாத கேசுங்க லட்சக்கணக்குல இருக்காங்க. ஆனா சர்வீஸ் போட்ட பி.ஈ., எம்.ஈ., தங்கம் மாதிரி காஸ்ட்லியாதானே கிடைக்கறாங்க?”

“படிக்க வேண்டிய காலத்துல படிக்காம போய்-இப்ப எவ்வளவு அனுபவ அறிவிருந்தும் அடிமை மாதிரி அர்த்தமில்லாம கிடக்கறோமே மாப்ள.”

-அவர்களின் முனங்கல்களை அந்த ஆலைக்குள் சுழலும் யார்ன் வைண்டர்களும் நூல் போரல்களும் தங்களுக்கே உண்டான எந்திர சப்தங்களுடன் போட்டு அமுக்கின.

உள் கூட்டில் கூரை இரும்பு கர்டர்களில் அமர்ந்திருந்த புறாக்கள் ஜாலியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

நல்லவேளை மனித ஜென்மம் எடுக்காமல் சுதந்திரமான புறாக்களாய் பிறப்பெடுத்து விட்ட சந்தோஷம் அவற்றிடம்…

# 9

‘மாதங்களில் நான் மார்கழி’ என்றான் கண்ணன். அப்படி ஒரு சிறப்புமிக்க தெய்வீக மாதம் இது. இந்த மாதம் இந்துக்களுக்கு மட்டுமல்ல. கிறிஸ்தவர்களுக்கும் ஒரு தலை சிறந்த மாதம். இம்மாதத்தில்தான் ஏசுநாதர் பிறந்தார். மொத்தத்தில் மார்க்க

வழியைக் காட்டுவதால் மார்கழி என்று பெயர் வந்ததாகவும் சிலர் கூறுவார்கள்.

மார்கழியின் காலைப்பொழுது தேவர்கள் பூஜைநிகழ்த்தும் ஓர் உன்னதப் பொழுதாகும். அதாவது தவம் செய்து சக்தியை சேமித்து வைத்துக் கொண்டவர்களே தேவர்கள். சுரம் தப்பிப் போய் தவறில் இருப்பவர்கள் அசுரர்கள். எனவே தவம் மிகச் செய்த தேவர்களின் பூஜைக்குரிய காலை வேளையில் அண்ட வெளியிலும் அருள் அலைகள் பரவிக் கிடக்கும். அதை சுவாசத்தால் நாம் அடைய வேண்டும் என்கிற காரணத்தாலேயே மார்கழி அதிகாலை, துயில் எழுதுவதும், நீராடுவதும், வழிபடுவதும் ஒரு பழக்க வழக்கமாக நம்மில் வைக்கப்பட்டது.

இந்த மாதத்தில்தான் வைகுண்ட ஏகாதேசி என்கிற சிறப்புமிக்க ஏகாதேசி திதி வருகிறது. ஏகாதேசி விரதம் என்பது முக்திக்கு மட்டுமல்ல, உடல் நலத்துக்கும் பெரிதும் வழிகாட்டுவது. முதுமையில் ஒருவர் ஆரோக்கியமாகத் திகழ்ந்திட இளமையில் ஏகாதேசி விரதம் இருப்பது மிகவும் நன்மையளிக்கும். இந்த மாதத்தின் மற்றொரு சிறப்புமிக்க நிகழ்வு ஆருத்ரா தரிசனமாகும். சிவனுடைய நாட்டிய கோலம் இது. இதை தரிசிப்பதும் விசேஷமானது.

கண்ணாடி முன் நின்று ஷேவ் செய்து கொண்டிருந்தான் கைலாசம். தொலைபேசி அலறியது. போய் எடுத்தான். காதில் விழுந்த செய்தியால் கதிகலங்கியும் போனான். தாடையில் சோப்பு நுரையுடன் அப்படியே உட்கார்ந்து விட்டான். காய்கறிக் கூடையுடன் மார்க்கெட்டில் இருந்து உள்ளே நுழைந்திருந்த சாருலதாவும் மகனுடைய ஸ்தம்பிப்பை கவனித்தாள்.

‘தம்பி… என்னப்பா இது. ஒழுங்கா ஷேவ் கூட பண்ணாம உட்கார்ந்துட்டே…”

“என்னன்னும்மா சொல்வேன். அப்பாவுக்கு ஆபீஸ்ல திடீர்னு ஹார்ட் அட்டாக்காம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்காங்க. ஏதோ நடக்க கூடாதது நடந்திருக்கு…”

“அய்யய்யோ…” சாருலதாவை கூடையைக் கீழே போட்டபடி அலறி விட்டாள்!

ஓடி வந்த இருவரையும் நண்பர்கள் எதிர் கொண்டனர். மோகன்குமார் கைலாசத்தை தனியே அழைத்துச் சென்று நடந்து முடிந்த

அவ்வளவையும் கூறினான்.

“ஏன் அங்கிள்… ஒரு மனுஷன் நல்லபடியா வேலை பாக்கறது கூடுவா ஒரு தப்பு. ஒரு அதிகாரி இப்படிக்கூடவா விளையாடுவான்?”

“என்னப்பா கேள்வி… விளையாடி முடிச்சிட்டான். ஒரு வகைல இப்படி ஆனதுக்காக சந்தோஷப்படு. இல்லேன்னா அந்த பி.ஆர்.ஓ. போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்து உள்ளே பிடிச்சுப் போட இருந்தான். இப்ப தர்மசங்கடத்துல இருக்கான். நாங்களும் அந்த புது பி.ஆர்.ஓ.வை இரண்டுல ஒண்ணு பாக்கலாம்னு தான் இருக்கோம்.”

“நான் தெரியாமத்தான் கேக்கறேன். எங்கப்பாவை இவ்வளவு இம்சைப்படுத்தற அளவுக்கு அந்த பி.ஆர்.ஓ.வுக்கு என்ன கொடுமை செய்தார்?”

“ஒரு ஐநூறு, அறுநூறு பேர் வேலை பாக்கற ஒரு தொழிற்சாலையில் லேபர்ங்கறவன் ஒரு அடிமை மாதிரி. மேல் மட்டத்துல எல்லாருக்கும் ஜால்ரா போட்டுக்கிட்டு அவங்க தப்பாவே நடந்துகிட்டாலும் சரிசரின்னு போகணும். உங்கப்பா அந்த ரகம் இல்லேங்கறது உனக்கே தெரியும். அடுத்து உங்கப்பாவோட விசுவாசம்..”

“விசுவாசமா இருந்தா கம்பெனி சந்தோஷம் தானே படணும்?”

“கம்பெனின்னு நீ யாரைச் சொல்றே?”

“எல்லோரையும் தான்…”

“உனக்கு கம்பெனின்னா என்னன்னே தெரியல. உண்மைல ஒரு தொழிலாளியோட விசுவாசத்துக்கு சந்தோஷப்பட வேண்டியவர் முதலாளிதான். அதாவது எம்.டி. இப்பல்லாம் உள்ளூர்லையே இருக்கறதில்ல. மாசத்துல பாதிநாள் வெளிநாட்டுல கழிச்சிட்றாரு. மிச்ச நாளையும் அவர் பெங்களூர், ஹைதராபாத்னு தன் மகன்களோட வீட்ல கழிச்சுட்றாரு. கம்பெனியை இப்ப நடத்தறவர் ஜெனரல் மேனேஜர்தான். எங்க முதலாளி அவரை ரொம்பவே நம்பறார். ஆனா அவர்தான் அந்த நம்பிக்கைக்குத் தகுந்த மாதிரி நடந்துக்கலை. கம்பெனில திரும்பின பக்கமெல்லாம் ஊழல்…கமிஷன்…அதுல அவருக்கும் பங்கு போகறதா ஒரு பேச்சு இருக்கு. அது எவ்வளவு தூரம் உண்மைன்னு தெரியாது. ஆனா தப்பு நடக்குது. அதை எப்படி தட்டிக் கேட்கறதுன்னு தான் தெரியல…”

“எல்லோரும் போய் எம்.டி.யைப் பார்த்து சொல்லலாமே.”

“அவர் நம்பணுமே…”

“ஏன்… இவங்க தவறுகளை நிரூபிக்க முடியாதா?”

“எப்படி முடியும்? இந்தக் காலத்துல யாராவது சாட்சி வெச்சுக்கிட்டு தப்பு பண்ணுவாங்களா? அதுலையும் எங்க கம்பெனில இருக்கற சில ஆபீசருங்க மலை விழுங்கி மகாதேவனுங்க. ஏதோ பிளானோட தான் எல்லா வேலையும் பண்ணிக்கிட்டிருக்காங்க.

முதலாளிக்கு மாசம் தவறாம லாபக் கணக்கு காட்டிறதால அவர் இவங்கள சந்தேகபட்றதில்ல. ஆனா பல கோடி லாபம் வர வேண்டிய இடத்துல சில கோடி லாபம்தான் வந்துக்கிட்டிருக்குங்கறது அவருக்குத் தெரியல…”

“இப்படி பேசத் தெரியும்… ஆனால் இந்த மனங்கொத்தி மனிதர்களை மடக்கிப் பிடிக்கத் தெரியாதா?”

“நமக்கெல்லாம் அந்த சக்தி கிடையாது? இப்பக்கூட சொல்றேன். அந்த பி.ஆர்.ஓ., அப்புறம் மேனேஜர்-இவங்களைப் பார்த்து ‘நான் இனிமே உங்க பக்கம்… நான் எதையும் கண்டுக்கலை’ன்னு உங்கப்பா சொல்லிட்டா போதும். இங்கையே ட்ரீட்மென்ட்ல இருந்து எல்லாமே ராஜ உபசாரமா மாறிவிடும்.”

“அதாவது சோரம் போகச் சொல்றீங்க…?”

“தப்பு தம்பி. ஊரோட ஒத்துப் போகச் சொல்வேன்.”

“இப்படிப்பட்ட கேவலத்துக்கு ஊரையே நீங்க காரணமாக்கறீங்களே அங்கிள்…”

-கைலாசத்திடம் கோபம் எகிறியது. மோகன்குமார் அதற்கெல்லாம் அசரவேயில்லை.

“தம்பி…உனக்கு சமுதாயத்தை பத்தி சரியா தெரியல. நம்ப ஜனங்கள்ல பலர் வினோதமானவங்க. தினசரி நம்மை எல்லாம் எவ்வளவோ பிரச்சினைகள் வாட்டி வதைச்சுக்கிட்டு இருக்கு. உதாரணமா ஒரு விஷயம் சொல்றேன். நான் குடி இருக்கற தெருவுல தார்ரோடு போட்டு 15 வருஷம் ஆச்சு. சாக்கடை வசதியும் கிடையாது. அதே போல எங்க ரேஷன் கடைல கிலோவுக்கு நூறுல இருந்து இறுநூறு கிராம் கம்மியாதான்-நான்லாம் பிறந்ததுல இருந்தே-சர்க்கரை வாங்கறேன். இதெல்லாம் தினசரி நிமிஷத்துக்கு நிமிஷம் நானும் எங்க கண் எதிர்க்க

எவ்வளவு டிராஃபிக் போலீஸ் லைசென்ஸ் இல்ல அது இல்ல இது இல்லைன்னு ஐம்பது நூறு புடுங்கறாங்க. தொல்லை வேற… கரண்ட்டும் நினைச்சா போகும். நினைச்சா வரும். இது அவ்வளவும் நாங்களும் ஏன் நீயும் நொடிக்கு நொடி அனுபவிச்சுக்கிட்டு இருக்கற பிரச்சினைகள்.

இதை எதை பத்தியும் யாருக்கும் கவலை கிடையாது. ஆனா பார்… என் பகுதியில் ஓரு ஜாதித் தலைவர் சிலை இருக்கு. அதுக்குப் பக்கத்துல யாரோ மூத்திரம் போய்ட்டாங்க. இதுக்காக என் ஏரியாவே கொந்தளிச்சு போச்சு. போற வர்ற பஸ்ல இருந்து… எத்தனை கடைகள் நாசமாச்சு தெரியுமா?

ஒரு சிலைக்கு – அவங்க பாஷைல சொல்லப் போனா உயிர் இல்லாத கல்லுக்குப் பக்கத்துல யாரோ ஒண்ணுக்கு போய்ட்டதுக்கு அப்படி ஒரு எதிர்ப்பைக் காட்டினாங்க. அந்த எதிர்ப்புல பத்துல ஒரு பங்கை நான் சொன்ன பிரச்சினைகளுக்கு எதிராக காட்டியிருந்தா நம்ம ஊர் எப்பவோ சிங்கப்பூர், மலேசியா போல மாறியிருக்கும். ஆனா இதுவரை காட்டினதில்லை. இங்க விலைவாசி எதிர்ப்பு போராட்டம், தண்ணி கடைக்கலேன்னா மறியல்ங்கறதெல்லாம் அப்பப்ப எங்கேயோ அத்தி பூத்தா மாதிரி நடக்கற ஒரு விஷயம். அவ்வளவுதான். இப்படி ஒரு சொஸைட்டில, ஒண்ணு: கைல பணம் இருக்கணும்… இல்லே பவர் இருக்கணும். ரெண்டும் இல்லே…நீ ரவுடியா இருக்கணும். இந்த மூணோடையும் சேராதவங்க அமைதியா நம்மைவிட ஒரு புத்தியில்லாத பைத்தியக்காரன் ஸ்கோர் பண்ணிட்டுப் போயிடுவான். அதனாலதான் ஊரோட ஒத்துப்போறது பெஸ்ட்டுன்னேன்… தப்பா?”

மோகன்குமார் அப்படிக் கேட்ட பிறகு கைலாசத்திடமும் அதற்கு ஒரு சரியான பதிலில்லை. ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. ஒரு தீமை அழகாக இன்னொரு தீமைக்கு இட்டுச் செல்கிறது. இன்று தப்பு செய்ய எவ்வளவோ நியாயங்கள் இருக்கின்றன. ஆனால் நல்லது செய்யத்தான் ஒரு சிறு ஊக்கம் கூட இல்லை என்பது கைலாசத்துக்கு புரிந்த போது அவனுக்கு எதிர்காலமே ஒருவித இருட்டாகத்தான் தெரிந்தது!

உள்ளே சாருலதா கண்ணைக் கசக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். கைலாசம் அந்த வில்லன் பி.ஆர்.ஓ.வை சந்திக்கத் தயாராகியிருந்தான்.

# 10

மாதங்களில் தை மாதம் என்பது பலவித சிறப்புகளைத் தன்னகத்தே

உடையது. இம்மாதத்தில் தான் பொங்கல் திருநாள் வருகிறது. சூரியன் மேஷ ராசியில் உச்சமாகும் காலம் என்று பொங்கல் தினத்தைப் பற்றி சொல்வார்கள். இம்மாதம் வரும் அமாவாசை உத்தராயணத்தில் வருவது… அதனால் இது விசேஷமானதாகக் கருதப்படுகிறது. அடுத்து தைப்பூசம். தை மாச பூச நட்சத்திரம் பழனி முருகனுக்கு உரிய தினமாகும்.

மார்கழி மாதம் முழுக்க தெய்வ வழிபாடும், கட்டுப்பாடும் கொண்டு வாழ்ந்த மக்கள் தை மாதத்தில் நிறைய திருமணங்களையும் நடத்துவர். இதன் விளைவாக அடுத்து வரும் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பிள்ளைப் பேற்றுக்குரிய பிரசவங்கள் நிகழும். எனவே திருமணத்துக்குப் பெரிதும் உரிய மாதமாகத் தைமாதமே கருதப்படுகிறது. இம்மாதம் பலவித கோலாகலங்களுக்கும் அடி கோலுகிறது. பூகோளக் கணக்குப் படி அளவான குளிர், மழையற்ற தன்மை, விளைந்த விவசாயப் பொருள்கள் சந்தைக்கு வருவதால் மலிவான விலை, நல்ல வர்த்தகம், நிறைய முகூர்த்தம், இதனால் பொன், பட்டு போன்றவற்றுக்கும் நல்ல வியாபாரம் என்று தை மாதம் ஒரு சுறுசுறுப்பான எல்லோரும் பெரிதும் விரும்பும் ஒரு காலக்கட்டம் கொண்டதாக உள்ளது!

பெங்களூர்!

ஜிலுஜிலுவென்ற க்ளைமேட்… ஆனால் பஸ்சை விட்டு இறங்கியிருந்த கைலாசத்துக்குத் தான் மனது நெருப்பாகவே இருந்தது. எப்படியோ சிரமப்பட்டு எம்.டி. கைலாசத்தின் முகவரியைப் பெற்றிருந்தான். அவரைப் போய்ப் பார்த்துப் பேச வேண்டும் நடந்ததை எல்லாம் சொல்லி நியாயம் கேட்க வேண்டும் என்கிற துடிப்பு அவனுக்குள்.

எந்த அளவு அது நடந்து முடியும் என்பதில் சந்தேகமும் கூட. முகவரியைக்கூட ஒரு மேலதிகாரி தான் கொடுத்திருந்தார்.

“தம்பி… நான்தான் அட்ரஸ் கொடுத்தேன்னு தெரிய வேண்டாம். கவனம்.” -என்று பயந்து கொண்டுதான் கொடுத்திருந்தார். அதுவே கைலாசத்தை பாதி கட்டிப் போட்டு விட்டது. இருந்தும் அவன் இள இரத்தத்துக்குள் நிறைய நம்பிக்கை.

அப்பா ஒரு ஏப்ரல் முட்டாளாக இருந்தால் தானும் அப்படி இருக்க வேண்டுமா என்ன? ஒரு லாட்ஜில் ரூம் போட்டு குளித்துவிட்டு ஒரு சிறு பாக்கெட் ரிக்கார்டருடன் எம்.டி.யைப் பார்க்க கிளம்பிவிட்டான்.

“பாத்துப்பா…

அப்பாய்ண்ட்மென்ட் இல்லாம அவர் யாரையும் பார்க்க மாட்டார். மீறி பார்த்தாலும் கம்பெனி பத்தி ஏதாவது கம்ப்ளைண்டுன்னு சொன்னாலே ‘போய் ஜி.எம்.கிட்ட சொல். அதுக்குத்தான் நான் அவருக்கு சம்பளம் கொடுக்கறேன்’னு சொல்வார். ‘அவர்கிட்ட சொல்றதுல பிரயோஜனம் இல்லை’ன்னா ‘அதை உன்னால நிரூபிக்க முடியுமா’ன்னு கேட்பார். கிட்டதட்ட, ‘கடவுள் இருக்குன்னு சொல்றவங்க தங்கள் கட்சியை நிரூபிக்க என்னவெல்லாம் கஷ்டப்படணுமோ அவ்வளவு கஷ்டப்படணும்.

அதுமட்டுமல்ல-குற்றம் குறை சொல்லிட்டுத் திரும்பின அஞ்சாவது நிமிஷமே யாரைப் பத்தி குற்றம் சொன்னியோ அவங்களுக்குத் தகவல் போயிடும். இப்படித்தான் இவ்வளவு நாளா நடந்துகிட்டிருக்கு. இதுதான் எம்.டி.ஸ்டைல். அவர் தன் சகாக்களை அதாவது டாப் மேனேஜ்மென்ட்டை அந்த அளவு நம்பறார். அதுமட்டுமில்ல, தொழிலாளின்னாலே அவன் குறை சொல்றவன், திருப்தி அடையாதவன், ஒழுங்கா வேலை பாக்காம ஏமாத்தறவன்னு அவருக்கு ரொம்ப ஸ்ட்ராங்க சொல்லப்பட்டு இருக்கு. ஆகையால அவருக்கு உண்மைப் புரிய வைக்கறது அவ்வளவு சுலபம் கிடையாது…”

-இப்படி எல்லாமும் அந்த அதிகாரிதான் சொல்லியிருந்தார். எல்லாமே அவனுக்குள் நினைக்கப் பாவமாகக்கூட இருந்தது. ஒரு கூட்டத்துக்கு மேல் ஒரு மனிதன் வளர்ந்து விட்டால் அதன்பின் அவன் உயரமே அவனுக்குப் பகையாகி விடுகிறது. உண்மையும் பொய்யும் அவன் வரையில் பிறர் சொல்வதை வைத்துத் தான்… நேரடி அனுபவங்களுக்கு அந்த மனிதருக்கு இடம் இல்லாமலே போய்விடுகிறது. அந்த இடைவெளிக்குள் அதிகார வர்க்கத்தால் சுலபமாகவே புகுந்து செல்ல முடிகிறது. ஆனால் அது இல்லாதவர்களுக்கான பாவம் விதிவிட்ட வழி என்றாகிவிட்டது. எல்லாவற்றையும் அசை போட்ட படியே எம்.டி.யின் பங்களா முன் போய் நின்றான்.ஜீன்ஸ் பேண்ட், டீ-ஷர்ட், தலையில் கேப் என்று ஒரு ஜேம்ஸ்பாண்ட் தோற்றம். மனதுக்குள் கனல். ஒருவித சத்திய வைராக்யம். ஆளுக்கு ஆளு பலூனுக்குள் அடைக்கப்பட்ட காற்றைப் போல கட்டிப் போட்டிருந்தான். எம்.டி.வீட்டு வாசலில் உள்ள கூர்க்கா ஏற இறங்கப் பார்த்தான். அவனிடம் போலீஸ் டிபார்ட்மென்டில் இருந்து வருவதாகக் கூறினான்.

“எதுக்கு?”

“அதை உன்கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லை.”

“அப்ப எங்க எம்.டி. பி.ஏ. வருவார் அவர் கிட்டையாவது சொல்லுங்க…”

-கூர்க்கா, பி.ஏ. வைக் கூப்பிட்டான். பி.ஏ. ஒரு வயதான கன்னடியர். ஸ்வெட்டர் போட்டு குல்லாவெல்லாம் அணிந்திருந்தார்.

“யெஸ் மிஸ்டர் போலீஸ் ஆபீசர்…”

“ஐ ஆம் சாரி மிஸ்டர் பி.ஏ…நான் உங்க எம்.டி.கூடப் பேசணும்.இட் ஈஸ் பர்சனல்…”

“அப்படி எல்லாம் அவரைப் பார்த்துப் பேச முடியாது சார். எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லுங்க…”

“அவர் செய்த ஒரு தப்பை பத்தி உங்ககிட்ட எப்படி சொல்ல முடியும்?”

“அவர் தப்பு பண்ணினாரா.. வாட்டு டு யூ மீன்?”

“அவர் கார்ல வரும் போது அந்த கார்ல ஒருத்தர் அடிபட்டுட்டார். ஆனா உங்க டிரைவர் அதை கவனிக்காமலே வந்துட்டார்.”

“இருக்காது. நோ சான்ஸ்.. யாரோ தப்பா சொல்லியிருக்காங்க.”

“கார் நம்பரை வெச்சு ஆர்.டி.ஓ. கிட்ட போய் அட்ரஸை வெரிஃபை பண்ணிட்டுத்தான் வந்திருக்கேன்.”

“இருங்க…சார்கிட்ட கேட்டுட்டு வந்து சொல்றேன்.”

“அதை நான் கேட்டுக்கறேன். மரியாதையா அவரை நேர்ல வரச் சொல்லுங்க…”

“நீங்க ஆள் தெரியாம பேசறீங்க… சார் இந்த இந்தியாவோட முதல் பத்து பணக்காரர்ல ஒருத்தர். பிரிட்டிஷ் பிரதமரோட டின்னரும், அமெரிக்க ஜனாதிபதியோட பிரேக்ஃபாஸ்ட்டும் சாப்பிடற அளவு அந்தஸ்துல உள்ள ஒருத்தர்…”

“ஆனாலும் இந்திய நாட்டு சட்டம் எல்லோரையும் மனுஷன்னுதான் சொல்லுது. உங்க எம்.டி. செத்துட்டா அவர் உடம்பையும் ‘பாடி’ன்னுதான் சொல்வாங்க. அண்டர்ஸ்டாண்ட்?”

-கைலாசம் போட்ட போடு… அந்த பி.ஏ. அவனை முறைத்து விட்டு உள்ளே சென்றார். ஓர் ஐந்து நிமிடம் கழித்து வந்து அவனை

அழைத்துக்கொண்டு ஓர் அறைக்குள் சென்றார். அந்த அறை காலியாக இருந்தது. உள்ளே இதமான ஏ.சி. அங்கே ஒரு கேண்டிட் கேமராவும் இயங்கியபடி இருந்தது. கைலாசம் அப்பொழுதே தன்னை எம்.டி இன்னோர் அறையில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருப்பதை அனுமானித்து விட்டான்.

எப்படியோ, மலை ஏறியாகிவிட்டது.

இனி தெய்வ தரிசனம் மட்டுமே பாக்கி.

தெய்வத்திடம் வரம் கிடைக்குமோ… இல்லை இருப்பதும் போய் விடுமோ?

# 11

“மாசிப் பனி மச்சைப் பிளக்கும்’ என்பார்கள் அப்படி ஒரு பின்பனிக் காலம் மாசிமாதம். இம்மாதத்தில் மகம் நட்சத்திர தினம் மிக விசேடமானது. அதே போல் இம்மாதம் வரும் சிவராத்திரியும் விசேடமானது. மாசி மகம் செந்தூர் முருகனுக்கு மிக விசேடமாக நாளாகும்.

இம்மாதத்தின் இன்னொரு தனிச்சிறப்பு விவசாயக் குடிகளும், உழைக்கும் வர்க்கமும் இம்மாத சிவராத்திரியன்று காடுகளில் குடி கொண்டிருக்கும் தங்கள் தெய்வங்களை தேடிச் செல்வதில் உள்ளது. நாகரிக வளர்ச்சி பெற்ற மனிதனின் தனிச்சிறப்பு ஆன்மீகம் என்னும் இறை நம்பிக்கையில் உள்ளது. அந்த ஆன்மீகத்தில் பரம்பரை பரம்பரையாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் குலதெய்வ வழிபாடு ஒரு தனிச் சிறப்புடையது. குலதெய்வ வழிபாடு ஓரு தனிச் சிறப்புடையது. குலதெய்வ வழிபாடு குடி விளங்கச் செய்யும்.

அந்த அறைக்குள் வாயில் பிடித்த பைப்பும் இதழிரண்டில் பிரியும் புகையுமாக கம்பீரமாய் நுழைந்தார் எம்.டி.கைலாசம். தமிழ் மகன் கைலாசம் அவர் வரவும் எழுந்து நின்று பணிவாகக் கை கூப்பினான். எம்.டி.க்கு அதுவே ஓர் ஆச்சரியம் தான்.

அந்த அறைக்குள் வேறு யாருமில்லை.

கேண்டிட் கேமரா சுழன்று சுழன்று படம் பிடித்துக் கொண்டிருந்தது.

“எக்ஸ்யூஸ்மீ சார்.. கேமராவை கொஞ்சம் ஆஃப் பண்ண முடியுமா?” – அவன் விருப்பத்தை அடுத்தக் கட்ட ஆச்சரியத்தோடு கவனித்தவர் எந்த

பதிலும் சொல்லாமல் வெறித்தார்.

“என்னால உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது சார். உங்களை சுத்தி இருக்கற ஆபத்துகள் வேணும்னா விலகும். என்னை நம்புங்க…”

“அதுக்கும் கேமராவுக்கும் என்ன சம்பந்தம்?”

“எனக்கு ஒண்ணுமில்லை சார்… நான் பேசி முடிச்சு பிறகு நீங்கதான் டெலிகேட்டா ஃபீல் பண்ணுவீங்க…”

அவன் பேச்சில் சிறு நம்பிக்கை ஏற்படவே, ரிமோட்டை தேடி எடுத்து ஒரு பட்டனை தேடி எடுத்து ஒரு பட்டனை அழுத்தியதில் அந்த கேமரா தற்காலிகமாக தன்னுள் பாயும் மின்சார உயிர் பிரிய- இறந்து போனது.

“இப்ப சொல்…யார் நீ…? நீ நிச்சயமா போலீஸ் இல்ல.”

“கரெக்ட் நான் உங்க விசுவாசத்துக்குரிய எம்ப்ளாயி தமிழ் செல்வனோட மகன் கைலாசம். ஐ.மீன்… உங்க பேர் தான் என் பேரும்…”

“எந்த தமிழச்செல்வன்?”

“நிஜமாலுமே ஞாபகம் இல்லையா-உங்க சென்னை பிளான்ட்ல ஸ்டோர் கீப்பராகவும், ஸ்டாக்டேக்கராகவும் இருக்கற தமிழ்ச்செல்வனை?”

“உம்… இப்ப ஞாபகத்துக்கு வந்தாச்சு… என்ன… உங்கப்பாவை டெர்மினேட் பண்ணப் போறது தெரிஞ்சு என் கால்ல விழுந்து கெஞ்ச வந்திருக்கியா?”

“இல்ல… அவரை டெர்மினேட் பண்ணின பாவத்துக்கு நீங்க ஆளாகாதீங்கன்னு சொல்ல வந்தேன்.”

“நீ உள்ள வந்த விதம்தான் தப்புன்னா… இங்க என்கிட்ட பேசற விதமும் தப்பா இருக்கே…”

“ஐ ஆம் சாரி சார்… உங்களுக்கு தப்பெல்லாம் சரியாகவும், சரியெல்லாம் தப்பாகவுமே சொல்லப்பட்டுக் கிட்டு வருது.”

“இட் ஈஸ் எ யூஷ{வல் டயலாக். யாரும் வித்தியாசமாவே பேசமாட்டீங்களா?”

“உங்க அப்ரோச் கூட யூஷ{வல் அப்ரோச்சாத்தான் இருக்கு. நீங்கதான்

ஒரு மாறுதலுக்கு, என்னைப் போல சிலர் சொல்றதுல உண்மை இருக்கா, இல்லையான்னு செக் பண்ணி பாருங்களேன்.”

“இப்ப தப்பு யார்கிட்ட...?”

“துணிச்சல்தான்... என் தப்பை உன்னால நிரூபிக்க முடியும்?”

“நிச்சயமா... ஒரு இண்டஸ்ட்ரியை உருவாக்கறது பெருசு இல்ல சார். அது எப்படி நடக்குதுன்னு பார்த்துக் கிட்டே இருக்கணும். ஆனா நீங்க அப்படிப் பாக்கற மாதிரியே தெரியல.”

“தம்பி... நீ யார் கூடப் பேசறேன்னு தெரிஞ்சுதான் பேசறியா?”

“நல்லாவே தெரிஞ்சுதான் வந்திருக்கேன். உங்களுக்கு சில ஆச்சரியமான விஷயங்களை முதல்ல சொல்லிட்றேன். என் அப்பாவைக் காப்பாத்த நான் இங்க வரலை. அவர் இனி உங்க கம்பெனில வேலை செய்ய உங்க கம்பெனிக்குத்தான் தகுதி இல்லை. ஆகையால இனி எந்தக் காலத்துலையும் அவர் உங்க கம்பெனில வேலை செய்ய மாட்டார். அதுக்கு நானும் இடம் தர மாட்டேன். ஏன்னா நானும் படிச்சு முடிச்சிட்டேன். ஆரம்பத்துல உங்க கம்பெனில சேர்ந்து ஒரு பெரிய ஆபீஸரா வரணும்னு ஆசைப்பட்டேன். ஆனா சாதிக்க நினைக்கறவங்களுக்கெல்லாம் உங்க கம்பெனில இடம் கிடையாதுங்கறது தெரிஞ்சு போச்சு. கமிஷன் அடிக்கத் தெரியணும் ஊழல் பண்ணத் தெரியணும் எப்பவும் கம்பெனி எதாவது ஒரு பிரச்சினைல இருக்கணும்கறதுதான் நீங்க ரொம்ப நம்பற உங்க சகாக்களோட எண்ணம். அவங்களால சுலபமா சமாதானம் பண்ணவும் முடியுது. காரணம் உங்க சுபாவம்! உங்க தொடக்கம் எப்படியோ... ஆனா இப்ப உங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில பெரிய இடைவெளி. அது அவங்களால அதிகமாயிட்டே போகுது. அது உங்களுக்குத் தெரியல.

என் அப்பா நூறு சதம் விசுவாசி. கடமை உணர்வு உள்ளவர். சிறு தப்புக்கும் இடம் தராதவர். இதுவே அவருக்கு எதிரா போச்சு.

நடந்துருக்கற அவ்வளவும் சதி. இதை என்னால நிரூபிக்க முடியும். உங்க கண்ணால நீங்க அங்க நடக்கற அயோக்ய தனங்களையும் பார்க்கலாம். ஆனா நான் சொன்னபடி நீங்க கேட்கணுமே...? அதுக்கு உங்க மனசு இடம் கொடுக்கணுமே...?”

“சரி... அதுக்கு நான் என்ன செய்யணும்...?

“இதை நீங்க முழு மனசோட கேக்கறீங்களா?”

“உம்…”

“நிஜமாவா?”

“தம்பி…உன் பேச்சுல ஆவேசம் தெரியுது. எப்பவும் உண்மை உள்ள இடத்துலதான் ஆவேசம் ஒரு அனலோட வெளிப்படும். ஆவேசமா ஒருத்தன் நடிக்கறதுக்கும் எனக்கு வித்யாசம் தெரியும். நான் என்ன செய்யணும்னு மட்டும் சொல்.”

“முதல் காரியமா, என் அப்பாவோட டெர்மினேஷன் ஆர்டரை ஓ.கே. பண்ணுங்க. அப்படியே, அதிரடி நடவடிக்கை எடுத்ததுக்காக அந்த புது பி.ஆர்.ஓ.வுக்கு ஒரு கேஷ் அவார்ட் கொடுங்க. ஒரு முறை போன் பண்ணி, ‘நான் அமெரிக்கா போறேன். வர ஆறு மாசம் ஆகும். உங்களை நம்பித்தான் போறேன்’னு ரொம்ப நம்பிக்கையா சொல்லவும் செய்யுங்க. செய்துட்டு எல்லாரும் பார்க்கும் படியா அமெரிக்காவுக்கு ஃப்ளைட் ஏறிடுங்க. ஏர்போட்டுக்கு சென்னை யூனிட் டாப் லெவல்ல உள்ள எல்லோரும் வரட்டும். அந்த ஃப்ளைட் டெல்லி வழியாகத்தான் போகும். அங்க நான் உங்களை சந்திக்கிறேன். அங்க அடுத்த திட்டத்தை சொல்றேன்.”

“அதை இங்கையே சொன்னா என்ன?

“சார்… நான் இப்ப ஒரு அசைன்மென்ட்டை கைல எடுத்துருக்கற ஒருத்தன். ஒரு நல்ல பாஸோட வேலை என்னன்னா அதுக்கு ஓத்துழைப்பு தர்றதுதான்…”

“ஓ.கே…டன்!” – எம்.டி. கைலாசம், தமிழ் மகன் கையிலாசத்தின் கைகளைக் குலுக்கினார். கைலாசமும் உறுதியாக அதைப் பற்றினான். ‘இந்த வாய்ப்பை நான் அவ்வளவு சுலபத்தில் விட்டுவிட மாட்டேன்.’ – என்கிற ஓர் உறுதி அதில் தெரிந்தது.!

# 12

தமிழ் மாதங்களின் இறுதி மாதம் பங்குனி மாதமாகும். இது ஓர் இலையுதிர்கால பருவமாகும். பனி விலகி நிற்க வெயில் எட்டிப் பார்க்கும் ஒரு காலம் இது. இம்மாதத்து உத்தர நட்சத்திரம் முருகனுக்கும், மகாலட்சுமிக்கும் உரிய காலமாகும். இந்த மாதத்திலும் வீடு குடிபுகுதல், கட்டுதல் போன்ற காரியங்களைச் செய்ய

மாட்டார்கள்.

அவதாரச் சிறப்புமிக்க இராமாவதாரத்து இராமனின் பிறந்த தினம் ஸ்ரீ ராம நவமி என்னும் பெயரில் இந்த மாதத்தில் தான் வருகிறது. இம்மாதம் 'இனிப்பு உவர்ப்பு கசப்பு' என்னும் மூன்று சுவை உடைய வெல்லம். வேப்பம் பூ, மாங்காய் போன்றவற்றை உண்ணுவார்கள். அந்த சுவை வாழ்விலும் பலவித ருசிகள் இருப்பதை மறைமுகமாக எடுத்துக் கூறுவதாகும்.

இம்மாதத்தில் ஒரு மருத்துவ சிறப்பும் உள்ளது. பெரிய அளவில் மரங்களில் பூக்கள் காலம் இது. பூத்தால்தான் காய்ப்பு நிகழும். எனவே இம்மாதத்தைக் தாவரங்களுக்கான ஒரு மாதமாகக் கருதி விவசாய செழிப்புக்கு ஓர் அடையாள மாதமாகவே நம் முன்னோர்கள் கருதி வந்தனர்!

தொழிற்சாலையே பரபரத்துப் போய் விட்டது. தமிழ்ச்செல்வனை டெர்மினேட் செய்யச் சொல்லி எம்.டி.கைலாசமும் கைப்படவே ஒரு கடிதமும் எழுதி விட்டார். அந்தக் கடிதத்தில் 'ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டவர்கள் என் விசுவாசிகளாவே இருந்தாலும் அவர்களை டெர்மினேட் செய்வதே சரி. என் மேலான விசுவாசத்தை சொல்லி அவர்கள் தப்பிக்க முடியாது' என்கிற வரிகள் அண்டர்லைன் செய்யப்பட்டு கடிதம் ஜெராக்ஸ் காபி எடுக்கப்பட்டு நோட்டீஸ் போர்டிலும் போடப்பட்டது.

உள்ளே ஒருவரிடமும் பேச்சு மூச்சே இல்லை. அந்தக் கடிதத்தோடு இன்னோர் எச்சரிக்கைக் கடிதத்தையும் அந்த பி.ஆர்.ஓ. போட்டு விட்டான். அது 'தொழிற்சாலைக்குள் யாராவது யாருடனாவது பேசிக் கொண்டிருந்தால் அவர்களையும் சஸ்பெண்ட் செய்வேன்' என்று எச்சரித்திருந்தது. அதன் எதிரொலி... இதற்கு நடுவில் எம்.டி. கைலாசம் ஆறுமாச காலம் அமெரிக்காவிற்கு ஒரு ட்ரீட்மென்டிற்காகப் போகிறார் என்பதும் ஒன்றாகவே பரவி விட்டது. ஒருபடி மேலே போய் அவருக்கு த்ரோட் கான்ஸர் என்றும் ஒரு செய்தி கிசுகிசு ரகத்தில் பரவிக் கொண்டிருந்தது.

வேலாயுதராஜனும், அக்கவுண்ட்ஸ் மேனேஜரும் இனி தங்களுக்குத்தான் காலம் என்பது போல மிதப்பில் இருந்தனர்.

"சார்.. சேர்மன் எதனால நம்ம தமிழ்ச் செல்வன் டெர்மினேஷன் ஆர்டர்ல கையெழுத்துப் போட்டார்னு இப்பத்தான் தெரியுது." -என்று மேனேஜர், வேலாயுதராஜனிடம், ஒரு பெரிய ரகசியமே தனக்குத்

தெரியும் என்பது போலத் தொடங்கியிருந்தார்.

“எதனால?”

“அவருக்குத் த்ரோட் கேன்சர். இனிமே பெரும்பாலும் பெட்ரெஸ்ட்தான். இந்த நிலைல அவருக்கு நம்மை விட்டா கதி…?”

“ஓ நீங்க அப்படி வர்றீங்களா?”

“வேற எப்படி வர… கூட்டி கழிச்சு பாருங்க. சமீபகாலமா அவர் யாரோடையும் நெருங்கறதே இல்லையே. இப்ப எல்லாம் காரணம் தெரியுது.”

“அப்ப இனி நாம கொஞ்சம் தைரியமாகவே விளையாடிக்கலாம்னு சொல்லுங்க.”

“பின்ன… ஆறு நிறைய தண்ணி போகும் போது ஆளுக்கு கொஞ்சம் குடிக்கறதுல தப்பு என்ன?”

“நீங்க இப்படி பாக்கறீங்க. என் பாய்ன்ட் ஆஃப் வியூவே தனி. பணத்தைப் போட்றதால அவர் முதலாளி. ஆனா அதை வெச்சு இன்டஸ்ட்ரியை ரன் பண்ணி அந்த பணத்தைக் காப்பாத்தி கூடவே லாபமும் சம்பாதிச்சுத் தர்றது நாமதான். ஆகையால வர்ற லாபத்துல சரிபாதி பங்கு நமக்கு அவர் தரணும். ஆனா எந்த முதலாளி மனசு வந்து தந்துருக்கான்?”

“ஸோ… நாமளே எடுத்துக்க வேண்டியதான்னு சொல்ல வர்றீங்க… அப்படித்தானே?”

“பின்ன… இருந்த ஒரு இம்சை இந்த தமிழ்ச் செல்வன். அவனையும் அனுப்பியாச்சு. இனி ஒரு பய வாயைத் திறக்க மாட்டான்.”

“கரெக்டா சொன்னீங்க…”

-மேனேஜர், வேலாயுத ராஜனுக்கு ஜால்ரா போட, உற்சாகமாக பாட்டிலைத் திறந்து ஒரு மடக்கு ஊற்றிக் கொள்ளவும் செய்தான்.- அந்த பி.ஆர்.ஓ. அப்போது அவன் செல்போன் வழியே அழைப்பு…

செல்போன் திரையைப் பார்த்த வேலாயுதராஜனுக்கு தூக்கி வாரிப் போட்டது. திரையில் எம்.டி.யின் பெயர்.

“சார் எம்.டி. லைன்ல…”

“அட… யோகக்காரருங்க நீங்க. இப்படி எல்லாம் டைரக்டா கூப்பிடவே மாட்டாரு. என்னன்னு கேளுங்க.”

-மேனேஜர் எடுத்துத்தர வேலாயுதராஜனும் பணிவாக “வெரி குட்மார்னிங் சார்…” என்றான்.

“மிஸ்டர் வேலாயுதராஜன்… வந்து சார்ஜ் எடுத்த நாள்ல இருந்தே ரொம்ப சுறுசுறுப்பா நடந்துக்கிறீங்க போல இருக்கே…?”

“சார்…யெஸ் சார்… அது என் ட்யூட்டி சார்…”

“குட்… அப்படித்தான் இருக்கணும். நான் யு.எஸ். போகப் போறது தெரியும்தானே?”

“கேள்விப்பட்டேன் சார்… உங்க பயணம் நல்லா அமைய கடவுளை வேண்டிக்கிறேன் சார்.”

“ஓ… வெரி கைண்ட் ஆஃப் யூ… பை த பை உங்களை எல்லாம் நம்பித்தான் போறேன். கவனமா பாத்துக்குங்க…”

“டோன்ட் ஒர்ரி சார்… டர்ன் ஓவர்ல ஒரு நயா பைசா குறையாது சார். நான் என் ட்யூட்டிய சரியா செய்வேன்சார்…”

“எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. உங்களுக்கு நான் முழு அதிகாரமும் தரேன். தைரியமா செயல்படுங்க. கம்பெனிக்கு எதிரா யார் நடந்துக்கிட்டாலும் நடவடிக்கை எடுங்க. நானும் அப்பப்ப பேசறேன்.”

“இது போதும் சார்… இது போதும் எனக்கு…”

“குட்… நாளைக்கு எனக்கு ஃப்ளைட். உங்களை எல்லாம் ஏர்போர்ட்ல பார்க்க விரும்பறேன். வந்துடுங்க.”

“சார் என்ன சார் அப்படி சொல்லிட்டீங்க. நாளைக்கு மலர் கொத்தோட முதல்ல இருப்பேன் சார்…”

“ஓ…கே…பை.”

-மறுபக்கத்தில் அவர் முடித்துக்கொள்ள- இந்த பக்கமாய் வானமே வசப்பட்டு விட்டது போல ஒரு மகிழ்ச்சி. மதுபாட்டிலை எடுத்து அப்படியே கவிழ்த்துக்கொண்டான். மேனேஜருக்கு அவன் செயல் கொஞ்சம் ஓவராகப்பட்டது. தன்னிடம் பேசாமல் அவனிடம் மட்டும் பேசியது கொஞ்சம் நெருடியது.

“யோவ்… நாளைக்கு ஏர்போர்ட்டுக்கு போகணும். என்ன பார்க்காம ஃப்ளைட் ஏற மாட்டேன்னு சொல்லிட்டார் சேர்மன். எல்லா பவரும் தர்றதாகவும் சொல்லிட்டார்.”

-அக்கவுண்டஸ் மேனேஜரை ‘யோவ்’ என்று அழைத்துப் பேசியது அவரை மேலும் உறுத்தியது. இருந்தாலும் சகித்துக் கொண்டார்.

“யோகம் சார் உங்களுக்கு…” –என்று சற்று பெண்பிள்ளைத் தனமாக வழிந்தார்.

“சரி, சரி… போய் வேலையைப் பாரு… நாளைக்கு ஏர்போர்ட்டுக்குப் போகணும். மறந்துடாதே…”

-மேனேஜர் தலையாட்டிக் கொண்டே கிளம்பினார். நரிக்கு நாட்டாமை பண்ண வாய்ப்புகிட்டும் போது அது கிடைக்கு நாலு ஆடு என்று கேட்பது சகஜம்தானே?

ஏர்போர்ட்டுக்கு போய் எம்.டி.யை வழியனுப்பி விட்டு படகு போன்ற ஏ.சி. காரில் கம்பெனிக்குள் நுழைந்த போது, வேலாயுதராஜனுக்கு நிஜமாலுமே தலையில் ஒரு கொம்பு முளைத்த மாதிரித்தான் இருந்தது. ஏர்போர்ட்டில் மலர் கொத்து கொடுக்கும் போது எம்.டி. கைலாசம் வேலாயுதராஜனை மார்போடு கட்டிக் கொண்டது அவனுக்குள் ஒரு பெரிய ‘கிக்’ கையே உருவாக்கிவிட்டது.

அதை எல்லோரும் கவனித்தார்கள். 30 வருடம் சர்வீஸில் இருக்கும் மார்கெட்டிங் மேனேஜர் ஒருவர் வேலாயுதராஜனைத் தேடி வந்து “உங்களுக்கு எதாவது வசியம் தெரியுமா… சேர்மனை இப்படிக் கவர்ந்திட்டீங்களே?” – என்று கேட்ட போது வேலாயுதராஜன் சிரித்த சிரிப்புக்குள் புராண காலத்து அவ்வளவு அசுரர்களும் வரிசையாகத் தெரிந்தனர்.

அந்த சிரிப்பு கலையவில்லை. அத்தோடு ஃபேக்டரிக்குள்ளும் சுற்றி வர ஆரம்பித்தான். பார்க்கின்றவர் எல்லாம் படுவேகமாக குட்மார்னிங் சொன்னார்கள்.

தொழிற்சாலை வியாதிகளில் குட்மார்னிங் வியாதிக்கு ஓர் இடம் உண்டு. எந்த தகுதியும் இல்லாவிட்டாலும் தொழிலாளிதான் அதிகாரவர்க்கத்துக்கு முதல் குட்மார்னிங் சொல்ல வேண்டும். அதிலும் இந்த பி.ஆர்.ஓ. வேலாயுத ராஜன் போன்ற நபர்கள் யாராவது குட்மார்னிங் சொல்லத் தவறினாலோ, மறந்து போனாலோ காய்ந்து

விடுவார்கள். சம்பந்தப்பட்டவர்களைச் சுற்றி சுற்றி வந்து அவர்கள் குட்மார்னிங் சொல்லி வழியும் வரை ஓயமாட்டார்கள்.

உண்மையில் ஒரு தொழிற்சாலைக்குள் குட்மார்னிங் என்பதற்கான சரியான உள்ளர்த்தம் ‘நான் உனக்கு அடங்கியவன்’ என்பதுதான். வேலாயுதராஜன் வரையில் பாதி பேர் பயத்திலே சொல்லிவிட்டார்கள். அக்கவுண்ட்ஸ் மேனேஜரும் அவனோடு சேர்ந்து கொண்டு வழிந்தபடியே வலம்வரத் தொடங்கினார். தொழிற்சாலை வலம் முடிந்த கையோடு கேன்டீனில் நுழையவும், அங்கே தனி மெனு! மணக்க மணக்க நெய்ரோஸ்ட், ஆனியன் ஊத்தாப்பம், மெதுவடை, அதற்கு மூன்று வித சட்னி என்று வரிசையாக வந்தது. குடிப்பதற்கும் பிஸ்லரி மினரல் வாட்டர்தான்.

“சார்… தமிழ்ச்செல்வன் சீட்டுக்கு இம்மீடியாட்டா யாரையாவது போடணும்…” –என்று தோசையை பிய்த்து விழுங்கும்போது அக்கவுண்ட்ஸ் ஞாபகப்படுத்தவும், வேலாயுதராஜன் ஒரு சிரிப்பு மட்டும் சிரித்தான்.

“என்ன சார் சிரிக்கிறீங்க?”

“சிரிக்காம…? போகும் போது டிபார்ட்மென்ட் பக்கம் போய்ப் பார்… நம்மாள் வேலை பார்த்துக்கிட்டிருப்பான்.”

“அய்யோ… எனக்கு தெரியாமலே ஆளை போட்டுட்டீங்களா?”

“என்னய்யா… எனக்கு தெரியாமன்னா? அதுக்கு என்ன அர்த்தம்? இந்த கம்பெனி ஜி.எம்.மையே நான்தான் தேர்ந்தெடுக்கப் போறேன். அதுக்கு என்ன சொல்லப் போறே…”

“நான் என்ன சொல்ல வர்றேன்னா…”

“எதுவும் சொல்லாதே… நான் அனுப்பற பில்லை பாஸ் பண்ணிகிட்டு போய்க்கிட்டே இரு. ஆறு மாசத்துல இந்த கம்பெனியை நான் எப்படி மாத்திக் காட்றேன் பார்.”

“உங்க தைரியம் யாருக்கும் வராது சார்…”

“அதுக்குத்தான் சேர்மன் என்கிட்ட பவரை கொடுத்துட்டு போயிருக்கார்.”

“அது எனக்கு தெரியுது. டாப்ல சில பெரிய தலைங்க உங்க வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாம ஏதாவது பத்த வைக்காம இருக்கணும்.”

“பத்த வைச்சா வெச்சவங்க தான் சாம்பலாவங்க. சேர்மன் வரை மாசா மாசம் லாபம் கூடிக்கிட்டே போகும். அவருக்குத் தேவை அதுதான். அதே சமயம் கம்பெனிக்குள்ற முழுக்க முழுக்க நம்ம ஆட்களை நிரப்பிடணும்.”

“அப்ப எல்லாரையுமே தமிழ்ச்செல்வன் மாதிரி துரத்திடணும்கறீங்க…”

“ஆமாம்.. மொத்த கம்பெனியும் என் ஆட்களா இருக்கணும். அப்பத்தான் எல்லா காலத்துலையும் நிம்மதியா இருக்க முடியும். இங்க நான் வெச்சதுதான் சட்டம்னு இருக்க முடியும்.”

“இப்பவே அப்படித்தானே? என்ன சொக்குப் பொடி போட்டீங்களோ… சேர்மன் கம்பெனியை உங்க கைல கொடுத்துட்டாரு.”

“அப்பப்ப நீ அதிகம் பேசறே…”

“மன்னிச்சிடுங்க… ஒரு முக்கியமான விஷயம்.”

“என்னய்யா?”

“பஞ்சாப் லூதியானாவுல இருந்து இரண்டு சர்தார்ஜிங்க நாளைக்கு நம்ம கம்பெனிக்கு விசிட் பண்றாங்க.”

“வழக்கமான கஸ்டமர் விசிட் தானே புரொடக்ஷன் மேனேஜரை பார்த்துக்க சொல். இதுக்கு எதுக்கு என்கிட்ட சொல்றே?”

“இல்ல சார்… பார்ட்டி பெரிய பார்ட்டி. மாசம் ஒண்ணரை கோடி ஆர்டர் கொடுக்கப் போறாங்க. அதுல சரிபாதியா பிளாக்ல பண்ண முடியுமான்னு கேக்கறாங்க.”

“ஏன்… பில் போட்டா டேக்ஸ் பிராப்ளம் வருமாக்கும்?’

“ஆமாம்… எழுபத்தைஞ்சு லட்சத்துக்கு லெவன் பர்சன்ட் டாக்ஸ். கிட்டதட்ட ஏழு, எட்டு லட்ச ரூபா…”

“நாம ஓ...கே. பண்ணா நமக்கு எவ்வளவு கிடைக்கும்?”

“மாசம் ரெண்டு லட்சத்தை உங்க அக்கவுண்ட்ல போட்றுவாங்க…”

“இங்க டெஸ்பாட்ச்ல யார் சூப்ரவைசர்?”

“அதெல்லாம் நான் பாத்துக்கறேன். நீங்க சரின்னா…”

“உனக்கு இதுல எவ்வளவு?’

“கம்மிதான். ஐம்பதாயிரம்!”

“நிஜமா?’

“சத்தியமா…”

“பின்னாடி பிரச்சினை வராதே…”

“நான் இருக்கும் போது என்ன பயம். அடுத்து டெஸ்பாட்சுல அவ்வளவு பேரையும் கவனிச்சிட்டா போச்சு.”

“சரி நாளைக்கு நீயே முடிச்சிடு.”

“அவங்க உங்களப் பாக்கணும்கறாங்க…”

“இல்ல… இந்த மாதிரி பிசினஸ் டீல் எல்லாத்தையும் நீயே பார்த்துக்கோ. கம்பெனிக்குள் இன்னும் நிறைய தமிழச்செல்வனுங்க இருக்காங்க. இது கெட்ட காலம். ஒரு செல்போன் கேமரா போதும். படம் எடுத்து எஸ்.எம்.எஸ். பண்ண…”

“அதெல்லாம் எனக்கும் தெரியும். புரொடக்ஷன் மெஷின்ல இருந்து டெஸ்பாட்ச் லாரி டிரைவர் வரை எல்லாம் நம்ம ஆளுங்க. எல்லாருக்கும் சம்பளத்துக்கு மேலே கிம்பளம். அப்புறம் எப்படி பிரச்சினை வரும்.”

“குட்.. அதே சமயம் கம்பெனில டர்ன் ஓவர் குறைஞ்சிட்டதாகவும் யாரும் நினைச்சுடக் கூடாது. அந்த மீதி 75 லட்ச ரூபா ஆர்டரை பக்காவா பில்போட்டு நீட்டா பண்ணிடுங்க…”

“தலைவா…! நீங்க சரின்னு மட்டும் சொல்லுங்க. மிச்சத்த நான் பாத்துக்கறேன்.”

-கேண்டீனில் டிபன் சாப்பிட்டு முடிப்பதற்குள்ளாகவே 75 லட்ச ரூபாய் பிசினஸையும் பேசி முடித்து விட்டனர். அரசல் புரசலாக கேன்டீன் சூப்ரவைசர் காதில் விழுந்தது. ஆனால் தமிழ்ச் செல்வனுக்கு நேர்ந்தது ஞாபகத்துக்கு வந்து தன் கவனத்தை வேறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

மறுநாள்!

வேலாயுதராஜனின் இன்டர்காம் சிணுங்கியது.

“சார் நான் அக்கவுண்ட்ஸ் மேனேஜர் பேசறேன்.”

“என்னய்யா?”

“சர்தார்ஜி இரண்டு பேரும் ஓ.கே. சொல்லிட்டாங்க. அதே சமயம் அவங்க என் பேச்சை மட்டும் நம்பி கேட்கத் தயாரா இல்லை. ஜி.எம். முன்னு ஒருத்தரும் இப்ப இல்லை. தற்சமயம் எல்லாம் நீங்கதான்னு சொன்னேன். ‘அப்ப அவரை நாங்க பார்த்தே தீரணும்’னு பிடிவாதம் பிடிக்கறாங்க.”

“அப்படின்னா இன்னிக்கு ஈவினிங் எதாவது ஒரு ஹோட்டல்ல மீட் பண்ணலாம்னு சொல்... இங்க வேண்டாம்.”

“ஈவினிங் ப்ளைட்ல அவங்க டெல்லி போகணுமாம். டைம் இல்லேங்கறாங்க.”

“என்னய்யா... விடமாட்டேங்கறியே. புரொடக்ஷன் மேனேஜரை வெச்சு சமாளிய்யா...”

“அப்புறம் அந்த ஆள் தனக்கும் கமிஷன் கேட்பான். அதுபோக தமிழ்ச்செல்வனை நாம அநியாயமா போட்டு பார்த்துட்டதா நாலைஞ்சு பேர்கிட்ட புலம்பி இருக்கான் அவன்...”

“சரி... நீ அங்கேயே இரு. நான் வர்றேன்.”

-அரைமனதாக தன் சீட்டை விட்டுக் கிளம்பிய வேலாயுதராஜன் அக்கவுண்ட்ஸ் மேனேஜரின் அறைக்குள் நுழைந்த போது அங்கே அந்த சர்தார்ஜிகள்-பலமான குட்மார்னிங்கோடு எழுந்து நின்றனர். கூலிங்கிளாஸ், டர்பன், கன்னத்தில் பரு-என்று மிரட்டலான தோற்றம்.

“சர்தார்ஜி... சார்தான் மிஸ்டர் வேலாயுதராஜன். புது பி.ஆர்.ஓ. ரொம்ப தைரியசாலி. சேர்மன் இவர்கிட்டத்தான் எல்லா பவரையும் கொடுத்துருக்கார்.

“ஒரு பி.ஆர்.ஓ.வுக்கு இவ்வளவு பவர்னா நம்ப முடியலையே...”

ஒரு சர்தார்ஜி சன்னமாக சந்தேகப்பட்டார்.

“வாஸ்தவம்தான். இந்த ஃபேக்டரி ஒரு டைப்பான ஃபேக்டரி. இங்க லேபர்லாம் கொஞ்சம் முரடு. அவங்கள ஃபேஸ் பண்ற ‘தில்’ இவருக்கு ஒரு பேருக்குத்தான். மற்றபடி கிட்டத்தட்ட இவர்தான் இங்க எல்லாம்... கிட்டதட்ட ஒரு டைரக்டர் மாதிரின்னு வெச்சுக்குங்களேன்.”

“ஓ... வெரிகுட், நாளைக்கு எங்களுக்கு சப்ளைல எதுவும் பிரச்சினை

வந்துடாதே.

“அதெல்லாம் சரி… உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா இப்ப கொஞ்சம் ட்ரிங்ஸ் சாப்பிடலாமா?”

“இங்கையா… சாரி… எங்க ஃபேக்டரில அந்த கல்ச்சரே கிடையாது.”

“என்னங்க நீங்க… நாங்க எங்க பேக்ல ஒரு ஃபாரின் சரக்கை வெச்சிருக்கோம். ஜஸ்ட் ஒரு பெக்...

“பேச்சோடு ஒரு சர்தார்ஜி பேக்கை திறந்து பாட்டிலையும், கூடவே கண்ணாடி கிண்ணத்தையும் வெளியே எடுக்க. அதைப் பார்த்த நொடி வேலாயுதராஜன் கண்ணிரண்டும் பல்பு போல பிரகாசிக்கத் தொடங்கி விட்டது.

“ப்ளக்…ப்ளக்…” அந்த திரவம் பாட்டிலை விட்டுக் குதித்து கிளாஸில் இறங்க, பின் வேலாயுதராஜனுக்குள்ளும் இறங்க, பின் எச்சரிக்கை-கட்டுப்பாடு அவ்வளவும் மெல்ல மெல்ல தளர்ந்து அவனுக்குள் இருக்கும் வெளியே வரத் தொடங்கியது.

மது அருந்துவது போல சர்தார்ஜிகள் இருவரும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் வேலாயுதராஜனும், அக்கவுண்ட்ஸ் மேனேஜரும் அப்படியே மேஜை மேலேயே மயங்கி விழுந்து விட-கூலிங்கிளாஸ் அணிந்த சர்தார்ஜி தன் டர்பனை விலக்கி தாடியை நீக்கி முகப்பருவையும் பிய்த்துப் போட்டு எம்.டி.கைலாசமாய் நிமிர, பக்கத்து சர்தார்ஜியும் தன் வேடத்தைக் கலைத்தான்… அங்கே தமிழ்ச் செல்வன் மகன்கைலாசம்!

எம்.டி.கைலாசம் அந்த புத்திசாலி கைலாசத்தைக் கலங்கிய கண்களுடன் பார்த்தார். பின் ஒருவித பரவசத்துடன் அவனை இறுக்கி கட்டிக் கொண்டார். அப்படியே “தம்பி… நீ நினைச்சத சாதிச்சிட்டே. என் கம்பெனியையும் காப்பாத்திட்டே…” என்று அவன் கைகளைச் குலுக்கினார்.

இது ரொம்ப பழைய உத்தி சார். இதுக்கு நீங்க சம்மதிச்சதாலதான் உங்களால உண்மையநேராவே உணர முடிஞ்சிச்சு. நீங்க இனி ரெகுலரா கம்பெனிக்கு வந்து போனா இப்படி சர்தார்ஜியா மாற வேண்டிய அவசியம் வராது சார். என் அப்பாவும் ஒரு ஏப்ரல் முட்டாளாகியிருக்க மாட்டார்” என்றான் அவனும்.

“ரைட் இந்த துரோகிகளுக்கு ஒரு குப்பை லாரியை வரச் சொல்லி அதுல

இவங்கள அள்ளிப் போட்டுட்டு, முதல்ல உங்கப்பாவைப் போய் பார்ப்போம். கமான்…”

“சார்… இவங்கள மட்டுமில்ல… நிறைய பழைய மரபுகள்-கண்மூடித்தனங்களையும், குப்பை லாரில நீங்க ஏத்தணும். ஒரு சாதாரண மெக்கானிக்கும் தகுதிய வளர்த்துக்கிட்டா மேனேஜர் வரை உயர முடியும்கற மாதிரி புதிய விதிகளை உருவாக்கணும். கடின உழைப்புக்கு மட்டும்தான் இங்க மரியாதை இருக்கணும். போலி குட்மார்னிங்குகளுக்கு இல்லன்னும் ஒரு நிலையைக் கொண்டு வரணும் சார்,..”

-கைலாசத்தின் இள இரத்தத்தில் புதுமையான கருத்துகள் உற்சாகமாக வெளிப்பட்டது.

“நீதான் இனி புது பி.ஆர்.ஓ. எதையும் என்கிட்ட சொல்லாதே. செய்து காட்டு. என் அனுபவமும் ஆசியும் உனக்கு எப்பவும் துணையா இருக்கும்” –என்ற எம்.டி.கைலாசம் அந்த அறையை விட்டு வெளியே வந்தார். கூடவே தமிழ் மகன் கைலாசம். இருவரையும் திடீரென்று அங்க பார்த்த அவ்வளவு பேரும் வாயைப் பிளந்தனர். அவர்களுக்குத் தெரியாது - நடந்ததும் நடக்கப் போவதும்…!

முற்றும்.